இலங்கையில் செய்தி இதழாகப் பதிவு செய்யப்பட்டது.

# தொழிலாளர் பாதை

விலை: 1/50

★ மாதமிரு இதழ் ★ இதழ் 392 ★ 1990 ஜனவரி 19 வெள்ளிக்கிழமை

**அவச்யமம வாசிக்க வேண்டிய நூல்கள்:-**

★ இந்திய - இலங்கை ஒப்பந்தமும், புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பணிகளும் (நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அறிக்கை 19/11/87)

★ 1948 – கொல்வின் ஆர் டி சில்வா.

★ தோழர். கீர்த்தி பாலசூரியவின் நினைவு நீடூழி வாழ்க!
(பு. க. க. மத்திய குழு அறிக்கை)

★ கொர்பச்சேவும் ஸ்டாலினிசத்தின் நெருக்கடியும் ருஷ்யாவில் நடப்பது என்ன?
(நா. அ. அ. கு. அறிக்கை — 23-3-87)
விரைவில் வெளிவரும்

# பிரேமதாச — விடுதலைப் புலிகள் உடன்படிக்கை ஒழிக!

## தமிழ் தேசிய உரிமைகளைப் பேணு!

**ஆக்கிரமிப்பு இந்திய அமைதி காக்கும் படை புறப்பட்டதன் பின்னர் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணும் சாட்டில் தமிழர்களின் பாரம்பரிய தாயக பிரதேசங்களில் இலங்கை பொலிசையும் இராணுவத்தினையும் குவிப்பதன் மூலம் ஒரு இராணுவ—பாசிச சர்வாதிகாரத்தினை திணிக்கும் யூ. என். பி. அரசாங்கத்தின் தீவிர முயற்சிகளை எதிர்த்து தொழிலாள வர்க்கம் ஒன்றிணைந்து கிளர்ந்து எழுவதோடு அனைத்து ஒடுக்கப்படும் வெகுஜனங்களையும் அணிதிரட்ட வேண்டும்.**

இலங்கை அரச படைகளின் இந்த பலாத்காரமான பிரவேசமும் தமிழ் மக்களின் தேசிய ஜனநாயக உரிமைகளை காலால் நசுக்கும் முயற்சிகளும் அனைத்து மக்களையும் தொழிலாளர்களை நெரிக்கும் திசையில் தமது கரங்களை பலப்படுத்திக் கொள்ள எடுக்கப்படும் ஓர் முயற்சியாகும்.

யூ. என். பி. அரசாங்கம் நாட்டின் ஏனைய பாகங்கள் பூராவும் ஏற்கனவே தமது படைகளையும் கைக்கூலி பாசிச கும்பல்களையும் கொண்டு தினசரி நடாத்தும் தேடிக் கொல்லும் நடவடிக்கைகள் மூலம் கொல்லும் நூற்றுக்கணக்கான மக்களை சிறப்பாக இளைஞர்களை உயிருடன் சுட்டெரித்தும் வரும் வேளையில் திரும்பவும் தமது நாட்டு மிராண்டி அரச படைகளினை வடக்கு கிழக்குக்கு நகர்த்தத் தொடங்கி உள்ளது. இது ஏகாதிபத்திய வாதிகளினதும் இந்தியத் துணைக் கண்டத்தில் அவர்களின் முடிவருடி ஆட்சியாளர்களதும் இலங்கை பிற்போக்கு முதலாளி வர்க்கத்துடன் கூட்டாக அடைகாத்த எதிர்ப்புரட்சியின் பிரகாரமே இடம் பெறுகின்றது என்பதை நாம் அழுத்தம் திருத்தமாகக் கூறிவைக்க விரும்புகின்றோம். தென்ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க காங்கிரஸ் கமிட்டி உறுப்பினரும் இந்திய - இலங்கை உடன்படிக்கையின் சிற்பியுமான ஸ்டீபன் சொலார்ஸ் டிசெம்பர் 30ம் திகதி இலங்கைக்கு மேற்கொண்ட விஜயம் இந்த பிற்போக்கு சதிக்கு நல்ல சான்றாகும்.

இந்திய ஆளும் வர்க்கத்திற்கும் அவர்களின் இலங்கை சகபாடிகளுக்கும் இடையேயான அந்த போலி பிணக்கு, இந்தப் பிராந்தியம் பூராவும் வளர்ச்சிகண்டுவரும் வெகுஜன இயக்கங்களை நசுக்குவதற்கான—அதே எதிர்ப்புரட்சி இலக்குக்கான சிறந்த ஏற்பாடுகளை தமக்குள்ளே வகுத்துக் கொள்வதிலேயே ஏற்பட்டுள்ளது. பாசிச மக்கள் விடுதலை முன்னணி உட்பட இலங்கைப் பிற்போக்குச் சக்திகள் இந்திய எதிர்ப்பு கூச்சலைக் கொண்டு இனவாதக் குட்டி முதலாளித்துவப் போக்குகளை அணிதிரட்ட முயலும் அதே வேளையில் இந்திய ஆளும் வர்க்கம் தேசிய விடுதலைப் போராட்டங்களுக்கான தமது பம்மாத்து ஆதரவினை — உண்மையில் தமது சொந்த நாட்டுக்கு வெளியே — பயன்படுத்தி வெகுஜனங்களை மோசடி செய்து வருகின்றது.

சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ, இ.தொ.கா. தலைவர்களின் துரோகப் பாத்திரம், பொனபாட்டிச பிரமதாச ஆட்சி, ஆட்சிப் பீடம் ஏறவும் அனைத்துக் கட்சி மகாநாட்டில் பங்குகொண்டதன் மூலம் அதன் இராணுவ - பாசிச சர்வாதிகார முயற்சிகளுக்கும் உதவியது. இன்று தமிழீழ விடுதலைப் புலிகள் யூ.என்.பி. ஆட்சியுடனான தமது அப்பட்டமானதும் நேரடியானதுமான [illegible] இதில் சேர்ந்து கொண்டுள்ளனர்.

1989 டிசம்பர் 20ல் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் தாம் ஈழத்துக்கான போராட்டத்தினை நிறுத்தவும் (தமிழர்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம்) இனவாத முதலாளித்துவ அரசினதும் அதன் ஆயுதப் படைகளினதும் அதிகாரத்தினை ஏற்கவும் முடிவு செய்துள்ளதாகக் கொழும்பில் தெரிவித்தார்.

புதிய அரசியல் கட்சியான 'விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி' அமைக்கப்பட்டதையும் தேர்தல் ஆணையாளர் அதனை பதிவு செய்ய அங்கீகரித்ததையும் பிரகடனம் செய்யும் பொருட்டு தமிழீழ விடுதலைப் புலிகளால் நடாத்தப்பட்ட பத்திரிகையாளர் மகாநாட்டிலேயே அவர் இதைத் தெரிவித்தார். தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமை, அரசாங்க அதிகாரிகளின் கட்டளையின் பேரில் தாம் சூட்ட விரும்பிய மூலப் பேரில் இருந்து ஈழம் என்ற வார்த்தையை நீக்கிவிடவும் கூட உடன்பட்டது.

விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழ் ஈழ கோரிக்கையை கைவிட்டுவிட்டதா? எனக் கேட்கப்பட்டபோது அன்டன் பாலசிங்கம் கூறியதாவது: "அந்தக் கோரிக்கையை நாம் கைவிட்டு விட்டோம் எனக் கூறுவது எமக்கு புத்திசாலித்தனமானதல்ல. எவ்வாறெனினும் ஈழப் பிரச்சனை இப்போது எழவில்லை"

தமிழர்களுக்கு எதிராக நீண்ட காலமாகவே இனவாத கலவரங்களையும், ஒடுக்குமுறையையும் தூண்டிவிட்டுக் கொண்டு வந்த ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ ஆட்சியாளர்களுடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் குட்டி முதலாளித்துவ தலைமை துரோகமான சமரசத்துக்கு வந்துள்ளபோதிலும், தமிழ் தொழிலாளர்களும், ஏழை வெகுஜனங்களும் சுயநிர்ணய உரிமை உள்ளடங்கலாக தமது தேசிய ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டத்தினை கைவிடப் போவதும் இல்லை, கைவிடவும் முடியாது. தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமையின் இன்றைய நிலைப்பாட்டின் ஒரே அர்த்தம், தாம் தாக்கி விசச் சபதம் பூண்ட அதே பிற்போக்கு

★ 4ம் பக்கம் பார்க்க

## வட—கிழக்கிலிருந்து இந்திய—இலங்கை இராணுவத்தை [illegible]கற்[illegible]!

www.padippakam.com



# பிரேமதாச - விடுதலைப் புலிகள்...

## (1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்சியாளர்களின் சமபங்காளிகளாகவும் தமிழ் வெகுஜனங்கள் மீதான அதன் பிற்போக்கு கட்டளைகளை அமுல் செய்பவர்களாகவும் மாறியுள்ளனர். அவர்கள் தமிழ் ஒடுக்கப்படும் வெகுஜனங்களின் வரலாற்றுத் தேவைகளின் எதிரிகளாகியுள்ளனர்.

இந்திய-இலங்கை உடன்படிக்கைக்கு தமிழ் முதலாளித்துவக் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியும் மாறும் குட்டி முதலாளித்துவ தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எப்., புளொட், டெலோ, ஈரோஸ் என்பன அடிபணிந்ததன் மூலமும், பலம் வாய்ந்த 1 இலட்சம் இந்தியப் படைகளை தமிழ் பிரதேசத்தினுள் அணிதிரட்டியதன் மூலமும் தமிழ் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்தினை சிதறடித்து விட முடியவில்லை. இதே வழியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் இன்றைய ... இலங்கை ஆக்கிரமிப்பு படைகளுக்கு ... நிறுத்தவைப்பதன் மூலமும், இந்திய - இலங்கை உடன்படிக்கையின் நிபந்தனைகளை அமுல் செய்யும் பொலிஸ்காரர்களாக தாமே மாறுவதன் மூலமும் தமிழ் மக்களின் தேசிய ஜனநாயக உரிமைகளுக்கான நியாயமான போராட்டத்தினை தடுத்து நிறுத்தவும் முடியாது. அவர்களின் நிச ஆசாபாசங்களை நாசமாக்கிவிடவும் முடியாது.

இங்கு எல்லாவற்றுக்கும் மேலாக மிகவும் வெளிப்படையான விதத்தில் ஏகாதிபத்திய சகாப்தத்தில் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியின் எந்தவொரு பணியையும் தீர்த்து வைக்க உறுதியாகப் போராட முடியாத முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவக் கட்சிகளின் உடல்ரீதியில் இயலாமை அம்பலமாகியுள்ளது. தேசிய சுதந்திரமும், விவசாய சீர்திருத்தமும் இந்த முதலாளித்துவ ஜனநாயக பணிகளின் இரண்டு முக்கியமான பிரச்சினைகள். இப்பிரச்சினைகளை தீர்க்கும் பொருட்டு வெவ்வேறு நாடுகளில் காலத்துக்குக் காலம் தோன்றிய சகல இயக்கங்களும் அவை எவ்வளவு தான் தீவிரமாக இருந்த போதிலும், ஒடுக்கப்படும் மக்களது அவசரமான தேவைகளுக்கு எதிராக ஒடுக்குமுறை ஆட்சியினருடன் சமரச உடன்படிக்கைகளிலேயே போய் முடிந்துள்ளன.

இந்த முதலாளித்துவ குட்டி முதலாளித்துவ இயக்கங்கள் வெகுஜனங்களை அணிதிரட்டி ஜனநாயக உரிமைகளுக்காக ஒரு உறுதியான போராட்டத்தினைக் கொண்டு நடாத்த இலாயக்கற்றவையாக விளங்கின. ஏனெனில் இவை தமது ஒடுக்குமுறை எதிரிகளைக் காட்டிலும் வெகுஜனங்களையும் அவர்களின் புரட்சிகர வல்லமையையும் கண்டே அதிகம் அஞ்சுகின்றன. இந்த முதலாளித்துவ தேசிய இயக்கங்கள் தமது சொந்த தொழிலாள வர்க்கத்தினையும் ஏழைகளையும் தமது வர்க்க நலன்களையும் சலுகைகளையும் காக்கும் முயற்சிகளுக்கு எதிரான சக்திகளாகக் காண்கின்றனர்.

ட்ரொட்ஸ்கி இந்த நிலைமையைப் பின்வருமாறு விளக்கினார், முதலாளித்துவ வர்க்கம், தொழிலாள வர்க்கம் இரண்டில் ஒன்றை தேர்ந்தெடுக்கும், தவிர்க்க முடியாத பிரச்சனையை விவசாய மக்கள் முன்வைப்பதும், குட்டி முதலாளித்துவத்தை லாயக்கற்ற நிலைக்கு தள்ளுவதுமான முதலாளித்துவ அபிவிருத்தியின் அடிப்படையில் பெரிய முதலாளித்துவத்துக்கு எதிராக மோதலுக்கு வரும் தொழிலாள வர்க்கம் குட்டி முதலாளித்துவத்திலிருந்து முன் கூட்டியே எவ்வளவு தூரம் தன்னைப் பிரித்துக் கொள்ளுகின்றதோ, அவ்வளவு தூரம் பின் தங்கிய முதலாளித்துவ சமுதாயத்திலும் கூட இன்றைய வாழ்க்கையை நடாத்துவதற்கு குட்டி முதலாளித்துவத்திற்கு உள்ள திறமையை பற்றி பேசமுடியாது. குட்டி முதலாளித்துவமாக வெளித்தோற்றும் கட்சிக்காக விவசாய மக்கள் தீர்மானம் எடுக்கும் எந்நேரமும் அது தன்னுடைய முதுகை நிதி மூலதனத்திற்கு ஆதரவாக வழங்குகின்றது. ருசியாவின் முதலாவது புரட்சிக் காலத்திலும், அல்லது முதல் இரண்டு புரட்சியின் இடைக் காலத்திலும், இன்றும் ஜனநாயகப் புரட்சியினுள் விவசாய மக்களதும், குட்டி முதலாளித்துவத்தினதும் சுயாதீனத்தின் அளவு (அளவு மட்டும்) சம்பந்தமாக கருத்து வேறுபாடுகள் இருந்தபோதிலும் தற்போது இப்பிரச்சனை கடந்த பன்னிரண்டு வருடகாலத்திய சம்பவங்களின் பாதையினூடாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. அது திருப்பமுடியாத முறையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (நிரந்தரப் புரட்சி நியூபாக் வெளியீடு பக்கம் 126)

இன்றைய சந்தர்ப்பத்தில் குட்டி முதலாளித்துவ இயக்கத்தின் தன்மையைப் பற்றிய இந்தப் புத்திசாதுரியமான ஆய்வுகளின் அடிப்படையில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் அத்தகைய இயக்கங்களில் இருந்து தொழிலாள வர்க்கமும், ஏழை வெகுஜனங்களும் அரசியல் ரீதியில் சுயாதீனமான முறையில் அணிதிரட்டப்பட்டாக வேண்டும் எனத் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்துள்ளன. இந்த வலியுறுத்தல், சகல திரிபுவாதிகளுக்கும் எதிராகச் செய்யப்பட்டது. அவர்கள் சோசலிச வேலைத்திட்டத்தின் ஒரு பாகமாக இந்த ஜனநாயகப் பணிகளைத் தீர்த்து வைக்கும் தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகரப் பாத்திரத்துக்குப் பதிலாக குட்டி முதலாளி வர்க்கத்தின் கணக்கில் கிடைக்காத புரட்சிகர வல்லமையை ஆக்கப்பார்த்தனர்.

இந்திய படைகளின் ஆக்கிரமிப்பின்போது நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு 1987 நவம்பர் 18ல் வெளியிட்ட அறிக்கை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் வங்குரோத்தினை அம்பலப்படுத்தியது:

"(1987) அக்டோபர் 14ம் திகதி அளவில் கூட பிரபாகரன் இந்திய இராணுவத்தின் மக்கள் படுகொலை நடவடிக்கைகள் தப்பபிப்பிராயத்தின் அடிப்படையில் இடம் பெறுவதாகக் காட்ட முயன்று வந்தார்.

காந்திக்கு அனுப்பிய ஒரு செய்தியில் அவர் கூறியதாவது: "இந்தியா போன்ற ஒரு ஜனநாயக நாட்டிற்கு தமது தலைவிதியைத் தாமே தெரிவு செய்து கொள்ளும் ஜனநாயக சுதந்திரத்தைக் கொண்ட மக்கள் மீது தனது கருத்தை துப்பாக்கி முனையில் திணிப்பது பண்பாக மாட்டாது" இந்திய ஜனநாயகம் பற்றிய பிரபாகரனின் கண்டுபிடிப்பு அப்பாவித்தனத்துக்கு ஓர் நல்ல உதாரணம். கொழும்பிலும், புதுடில்லியிலும் யாழ்ப்பாணத்திலும் உள்ள தமது வர்க்க எதிரிகளுக்கு எதிராக தொழிலாளர்கள் விவசாயிகளை சுயாதீனமாக அணிதிரட்டுவதைத் தடை செய்வதை நோக்கமாகக் கொண்ட, தமிழ் வெகுஜனங்களை ஏமாற்றும் கேவலமான நடவடிக்கை."
(நான்காம் அகிலம் தொகுதி -15 இல;1)

இந்திய - இலங்கை உடன்படிக்கை 1987ல் தயார் செய்யப்பட்டது. ஏகாதிபத்தியத்தின் நேரடி தலையீட்டின் மூலம் இப்பிராந்தியத்தில் அவர்களின் முக்கிய பொலிஸ்காரனை இந்திய முதலாளித்துவ ஆட்சியாளரைப் பயன்படுத்தி, இலங்கை முதலாளித்துவ அரசினை பலப்படுத்தும் பொருட்டு செய்யப்பட்டது. இந்தப் பிராந்தியத்தில் யுத்தத்தின் பின்னைய தீர்வுகளையும் சிறப்பாக சிங்கள இனவாத அரசின் ஸ்தாபிதத்தினையும் பாதிக்க தமிழ் விடுதலைப் போராட்டத்துடன் இணைந்து வளர்ச்சி காணத் தொடங்கிய தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகர எழுச்சிக்கு எதிராக இந்த உடன்படிக்கை கைச்சாத்தாகியது.

இந்தியப் படைகளை தமிழர்களுக்கு எதிராகப் பயன்படுத்துகையில் யூ என் பி. அரசாங்கம் தனது ஆயுதப் படைகளை தெற்கில் உள்ள தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை ஒடுக்கப் பயன்படுத்தும் வாய்ப்பை இது வழங்கியது.

இச்சமயத்தில் தொழிலாளர்களிடையே வளர்ச்சி கண்டு வந்த எதிர்த்தாக்குதல் ஆளும் வர்க்கத்தின் முதுகெலும்பினூடாக மட்டுமன்றி 1946களின் பிற்பகுதியில் இருந்து முதலாளித்துவ அரச அமைப்புக்கு பூரணமாக அடிபணிந்துபோன பாக்குத்தொடுவாய்க்கு இருபுறமும் உள்ள தொழிலாள வர்க்க துரோகத் தலைவர்களிடையேயும் கிடுகிடுக்க அதிர்வுகளை உண்டுபண்ணியது. தொழிலாள வர்க்கம் தனது சொந்த போராட்ட விதிமுறைகளின் அடிப்படையில் சுயாதீனமாக போராட்டத்தினுள் தள்ளப்பட்டமை தமிழ் குட்டி முதலாளித்துவக் குழுக்களிடையேயும் இந்தப் பிற்போக்கு உணர்வலைகளை ஏற்படுத்துவதில் வேறுபடவில்லை.

இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆட்சேபனைகளின் அரசியல் ஒல்லித்தனம், பிரேமதாசா ஆட்சியின் எதிரிலான அவர்களின் முழு அடிபணிவின் மூலம் முன்னெருபோதும் இல்லாத விதத்தில் இன்று அம்பலமாகியுள்ளது. டிசம்பர் 20ம் திகதிய பத்திரிகையாளர்கள் மகாநாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அன்டன் பாலசிங்கம் கூறியதாவது; "அவர் (பாலசிங்கம்) த.ஈ.வி.பு. களின் (வி.பு.ம.மு.) சகல நடவடிக்கைகளையும் தேர்தலின்போது நிறுத்திக் கொள்ள உடன்பட்டார். ஆனால் 'புலிகளை' நிராயுதபாணிகளாக்குவது தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கும் கட்சிக்குமிடையே ஒழுங்குகள் செய்யப்படவுள்ளதாக அவர் சொன்னார்." காந்தி ஆட்சியுடனும், தி.மு.க. தலைவர்களுடனுமான சூழ்ச்சிகள் அடியோடு தோல்விகண்டதன் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் இன்றைய கணிப்பு என்னவெனில் தமிழ் தொழிலாள வர்க்கத்தினதும் ஏழை மக்களதும் தலைகளுக்கு மேலாக சிங்கள அரசுடனான ஒரு சமரசத்தின் மூலம் தமது சொந்த வர்க்கத்தின் நலன்களுக்கும், சலுகைகளுக்கும் ஒரு சந்தர்ப்பத்தை ஈட்டிக் கொள்ள முடியும் என்பதே.

தமிழீழ விடுதலை புலிகள் தலைவர்களின் இந்த நடவடிக்கையின் பிற்போக்கு அர்த்தத்தினை தனிமைப்படுத்தி புரிந்து கொள்ள முடியாது. உள்நாட்டிலும் அனைத்துலகிலும் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களிடையே வளர்ச்சி கண்டு வரும் போர்க்குணம் மிக்க புரட்சிகர முன்னணிப் பயணத்துடன் இது நேரடியாக இணைந்து கொண்டுள்ளது.

8 ம் பக்கம் பார்க்க


## "தொழிலாளர் பாதை"

### சந்தாதாரர் ஆகுங்கள்!

அஞ்சல் கட்டணம் உட்பட
"தொழிலாளர் பாதை" சந்தா விபரம்:

1 மாதம் — ரூ. 4.00 3 மாதம் — ரூ. 12.00
6 மாதம் — ரூ. 24.00 1 வருடம் — ரூ. 48.00

பெயர் :..........................................................


முகவரி :.........................................................

சந்தாக் காலம் :.................. ரூ: ......... சதம் ......

சந்தாப் பணத்திற்காகிய அஞ்சல் அல்லது
காசுக் கட்டளையுடன் நிரப்பிய இப்பத்
திரத்தை அனுப்பி வைக்க வேண்டிய
முகவரி:

நிர்வாகி,

"தொழிலாளர் பாதை"
இல. 90 1-வது மாவுகாகந்தை ஒழுங்கை
கொழும்பு — 10.



This pamphlet can be ordered from

Neue Arbeiterpresse
Alfredstr. 71
D – 4300 Essen 1
West Germany

Pour commander, écrire à
Marxisme Révolutionnaire
B.P. 388
75626 Paris Cedex 13

Please pay DM 1,- plus DM 0,50 postage to account no. 2 11 85 – 431, Postgiroamt Essen



This pamphlet can be ordered from

Neue Arbeiterpresse
Alfredstr. 71
D-4300 Essen 1
West-Germany

Pour commander, écrire à
Marxisme Révolutionnaire
B.P. 388
75626 Paris Cedex 13

Please pay DM 1.50 + DM 0.50 postage to account no 211 85 – 431, Postgiroamt Essen


**Subscribe to:**

**தொழிலாளர் பாதை**

The Tamil language paper of the Revolutionary Communist League, Srilankan section of the International Committee of the Fourth International, and excerpts from the paper of the Socialist Labour League (India), which is in sympathy with the ICFI, are regularly reprinted for distribution in Europa

**Have it posted** **20 issues: DM 26.-**

**Write to Neue Arbeiterpresse, Postfach 100 105, D - 4300 Essen 1, West Germany**

**Subscription payable to accont Neue Arbeiterpresse (Bettina Rippert), No. 211 85 - 431, Postgiroamt Essen (effected at any post office)**

**Fourth International**

**Now available: Volume 15, Nos. 3-4 (July-December 1988)**

Contains:

- The World Capitalist Crisis and the Tasks of the Fourth International. Perspectives Resolution of the International Committee of the Fourth International
- Gorbachev and the Soviet Union
- The 1992 European Internal Market
- Sri Lanka and the Assassination of Comrade R A Pitlawala
- The Cases of Patrick Slaughter and Mark Curtis

Fourth International — HOW THE WORKERS REVOLUTIONARY PARTY BETRAYED TROTSKYISM 1973 – 1985 — Statement of the International Committee of the Fourth International

Also available in German (DM 10 per issue)

**Subscription rates:**

| | | |
|---|---|---|
| US | 1 issue | $ 8.00 |
| | 1 year (4 issues) | $ 30.00 |
| Europe, Latin America | 1 issue | $ 10.00 |
| | 1 year (4 issues) | $ 40.00 |
| India, Asia, Africa, Australia | 1 issues | $ 12.00 |
| | 1 year (4 issues) | $ 45.00 |

**Labor Publications, Inc., P.O.Box 33023, Detroit, MI 48216**


## பிரேமதாச ... விடுதலைப்புலிகள் . . .

( 2ம் பக்க தொடர்ச்சி )

இந்தக்குட்டி முதலாளித்துவ தேசியவாதக் குழுக்களின் வர்க்கக் கொள்கையினால் நாம் இட்டுச் செல்லப்பட்டுள்ள முட்டுச்சந்தில் இருந்து வெளியேறுவதற்கான வழியைக் காணும் தமிழ் தொழிலாளர், ஒடுக்கப்படும் ஏழைகளின் பலம்மிக்க அவசியத்தின் உடன் விளைவுகளின் அச்சமே தமிழீழ விடுதலைப் புலிகளின் பூரணமான அடிபணிவுக்கும் பிரேமதாச ஆட்சியின் நச்சுத்தன்மையான சூழ்ச்சிகளுக்கும் பின்னணியாக உள்ளது. தெற்கில் மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே வி பி) பாசிச தாக்குதல்களுக்கும், இராணுவ தாக்குதல்களுக்கும் எதிரான தொழிலாள வர்க்கத்தினதும் ஒடுக்கப்படும் மக்களினதும் எதிர்தாக்குதல் எல்லாவற்றுக்கும் மேலாக புரட்சி கம்யூனிஸ்ட் கழகத்தின் அங்கத்தினர்கள் தொடர்ந்து இரண்டாவது தடவையாகவும் மத்திய வங்கி ஊழியர் சங்கத தலைமைக்கு தெரிவு செய்யப்பட்டமையும், ஐக்கிய முன்னணி கொள்கைகளின் அடிப்படையில் நடவடிக்கை கமிட்டிகளையும், பாதுகாப்பு கமிட்டிகளையும் அமைக்கும் பு. க. க. தொடக்கிவைப்பு தொழிலாள வர்க்க போராளிகளிடையே ஏற்படுத்திய தாக்கம் வளர்ச்சிகண்டுவரும் புரட்சிகர அபிவிருத்திகளைச் சமிக்கை செய்தது.

இந்த அபிவிருத்திகளை உலகளாவிய விதத்தில் தொழிலாள வர்க்கத்தின் தீவிரமயமாக்கத்தில் இருந்து பிரித்து விட முடியாது. தொழிலாளர்களும் ஒடுக்கப்பட்டும், மக்களும் முன்னேறிய நாடுகளில் உள்ள உலக ஏகாதிபத்திய கோட்டைகளுக்கும் மாஸ்கோ பீகிங்கிலும் கிழக்கு ஐரோப்பாவிலும் உள்ள உலக ஏகாதிபத்திய ஆளுமையின் முக்கிய எதிர்ப்புரட்சி தூண்களான ஸ்டாலினிச ஆட்சகளுக்கும் எதிராக அடிமேல் அடி அடிக்கத் தொடங்கி உள்ளனர்.

உலக ஏகாதிபத்திய நெருக்கடியின் இந்த தவிர்க்க முடியாத புரட்சிகர அலை, இந்தியத் துணைக் கண்டம் பூராவும் தொழிலாள வர்க்கத்தினதும். வெகுஜனங்களதும் போராட்டங்களில் வெளிப்பாடாகியது பாகிஸ்தான் பூட்டோ அரசாங்கம் இரண்டொரு வாக்குகளுடன் மட்டுமே ஆட்சியில் இருந்து வருகின்றது. நாளாந்த ரீதியல் ஆட்சியில் இருந்துவர அவர்கள் பாராளுமன்றத்தில் சூழ்ச்சி செய்து வருகின்றனர். பங்களாதேஷில் தொழிலாளர்களின் பொது வேலைநிறுத்தம் நாளாந்தம் வெடித்துக் கொண்டுள்ளது. கடந்த ஆண்டில் நாடுபூராவும் ஏற்பட்ட பொது வேலை நிறுத்தத்தினுல் காந்தியின் காங்கிரஸ் ஆட்சியின் அதிகாரம் முறியடிக்கப்பட்டது. சமபரில் இடம் பெற்ற பொதுத் தேர்தலில் அரசாங்கம் வீழ்ச்சி கண்டது. இது இரண்டு ஸ்டாலினிசக் கட்சிகளின் ஆதரவுடன் ஒடு சிறுபான்மை மக்கள் முன்னணி அரசாங்கம் ஆட்சிபீடம் ஏற வழிவகுத்துள்ளது.

இப்பிராந்தியத்தில் யுத்தத்துக்கு பின்னைய முழுத் தீர்வுகளும் முன்னெரு போதும் இல்லாத விதத்தில் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ள இந்தப் பின்னணியிலேயே தமிழீழ விடுதலைப் புலிகளின் குட்டி முதலாளிகள் பிரேமதாச ஆட்சியுடன் ஒரு துரோகத் தீர்வுக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இது தலாளித்துவ, குட்டி முதலாளித்துவ தேசிய இயக்கங்கள் உலகம் பூராவும் ஒரு புதிய கட்டத்துக்கு நாற்றம் எடுத்துள்ளதைப் பிரதிபலிக்கின்றது. ஒரு காலப்பகுதியில் தீவிரவாத வேடம் தாித்த இவை உலக புரட்சியின் ஒரு புதிய சகாப்தத்தினைக் குறிக்கும் தொழிலாள வர்க்க தின் புத்தெழுச்சியின் எதிரில் முகமூடி கிழிக்கப்பட்டுள்ளன,

மத்திய கிழக்கில் தொழிலாள வர்க்கத்திடையேயும், மேற்குகரை வெகுஜனங்களிடையேயும் இன்றிபாட இயக்கம் பரவி வருகின்றது. இது பீ எல் ஓ. முதலாளித்துவ தேசியவாத தலைவர்களை புரட்சியாளர்களாக காட்டிக் கொள்ள முடியாமல் செய்துள்ளது. அதற்குமாறாக அவர்கள் இஸ்ரேலின் சட்டமுறைமையை அங்கீகரிக்கவும் ஒரு மதச்சார்பற்ற பாலஸ்தீனத்துக்கான போராட்டத்தினை கைவிடவும் தள்ளப்பட்டுள்ளனர். இதே விதத்தில் சன்டினிஸ்டா தலைவர்கள் லத்தீன் அமெரிக்காவில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கொலைகார கைப்பொம்மைகளை அங்கீகரிக்க இணங்கியுள்ளனர். ஆபிரிக்காவில் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர்கள் ஆளவெறி ஆட்சியாளர்களுடன் சமரச பாதையில் பயணம் செய்து கொண்டுள்ளனர்.

இந்தியாவில் வட-கிழக்கு முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ தேசியவாத இயக்கங்கள் தேசிய முதலாளிகளின் வர்க்க சலுகைகளை தொடர்ந்து பேணிக் கொள்ளும் அடிப்படையில் மத்திய அரசாங்கத்துடன் தீர்வுககுச் செல்ல உடன்பட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அடிபணிவு இவற்றின் நிரலில் சேர்ந்து கொண்டுள்ளது.

இந்தியப் படைகள் தொடர்ந்து இங்கிருக்க வேண்டும் என்ற பிரச்சாரத்தின் மூலம் ஈ.பி.ஆர்.எல்.எப். பாசிச மக்கள் விடுதலை முன்னணி தெற்கில் தனது சக்திகளை கட்டி எழுப்ப நேரடியாக உதவுகிறது சிங்கள குட்டி முதலாளித்துவ பிற்போக்கு தட்டினரிடையே இந்திய எதிர்ப்பு தமிழர் எதிர்ப்பினை வலியுறுத்துவதன் மூலம் ஜனதா விமுக்தி பெரமுனவின் சக்திகளை கட்டியெழுப்ப இது உதவுகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள், இலங்கை ஆயுதப் படைகளுக்கு நேரடி ஆதரவு வழங்குவதன் மூலம் ஒரு இராணுவ சர்வாதிகாரத்துக்கு அவசியமான இராணுவ வீரர்களை கட்டியெழுப்ப உதவுகிறது

சமசமாஜ - கம்யூனிச - நவசமசமாஜ-இ. தொ. கா. தலைவர்களின் துரோகத்துடன் சேர்ந்து தமிழ் குட்டி முதலாளித்துவ இயக்கத்தின் இவ்விரு தலைமையையும் 'யன்பந்தி' ஜனதிபதி பிரேமதாசாவின் ஆட்சியின் கீழ் ஆளும் வர்க்கம், பாசிச, இராணுவ பாகங்களை ஒன்றிணைத்து ஒரு சர்வாதிகார ஆட்சியை நிறுவும் தனது முமற்சியை உக்கிரமாக்கியுள்ளது.

தெற்கின் பிற்போக்கு முதலாளித்துவ ஆட்சிக்கு தமிழ் குட்டி முதலாளித்துவ இயக்கத்தின் இருவரு பிரிவினரும் வழங்கு ஆதரவு, கடந்த இரண்டு மாதங்களாக வடக்கிலும் கிழக்கிலும் தமது படையேவல் போதுதல்களில் நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்களை பலி கொண்டதன் மூலம் உச்சக்கட்டத்தை அடைந்தது.

இந்தக் குட்டி முதலாளித்துவக் குழுக்கள் இந்தக் கொலைகார உள்மோதுதல்கள் மூலம் பயங்கரம், சீர்குலைவு, அவஸ்தைகளை தமிழ் வெகுஜனங்களுடையே உண்டுபண்ணியுள்ளன என்பதில் சந்தேகம் இல்லை, இந்தப் பிராந்தியங்களில் ஏகாதிபத்தியச் சார்பு இலங்கை முதலாளி வர்க்கத்தின்

9ம் பக்கம் பார்


# புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருங்கள்!

பெயர் :------------------------------

முகவரி : ------------------------------

கழகத்தைப் பற்றி எனக்கு மேலும் விபரங்கள் வேண்டும் நிரப்பிய இப்பத்திரத்தை அனுப்ப வேண்டிய முகவரி:

தேசிய செயலாளர்,

**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்**

இல; 90, 1 - ஆவது மாளிகாகந்தை ஒழுங்கை
கொழும்பு — 10.

www.padippakam.com



# பிரேமதாச - விடுதலைப் புலிகள்...

…ம் பக்கத் தொடர்ச்சி

பொலிஸ்காரன் என்ற வகையில் அவை ஸ்தாபிக்க எதிர்ப்பார்க்கும் ஆட்சிக்கான முன்நிபந்தனைகளை இவை சிருஷ்டிக்கின்றன. ஆட்சி தமக்கு கையளிக்கப்படுவதற்கு முன்னதாக இந்திய முதலாளி வர்க்கத்தின் மகாத்மா காந்தி – ஜின்னா தலைமை, இலட்சோப இலட்சம் உயிர்களைப் பலி கொண்ட சமய மோதுதல்களை இந்திய ஹிந்து – முஸ்லீம்களிடையே தூண்டி விட்டனர். வெகுஜனங்களை அ கண்டு உடல் ரீதியில் அஞ்சி நடுங்கும் அத்தகைய இயக்கங்களின் சிந்தனையைப் புரிந்துகொள்ள ஒருவர் இந்த நச்சுத்தனமான பாத்திரத்தை நினைவு கூர்ந்தாக வேண்டும்.

துரோக ஸ்டாலினிஸ்டுகளின் பூரண ஆசிர்வாதங்களுடன் அடைகாக்கப்பட்ட இந்த சதியின் காயங்களைக் குணப்படுத்த இந்திய தொழிலாள வர்க்கத்துக்கும், வெகுஜனங்களுக்கும் சுமார் 4 தசாப்தங்கள் எடுத்தபோதிலும், இன்று உலகப் புரட்சிகர அபிவிருத்தி நிலைமைகளின் கீழ் சிங்கள, தமிழ் தொழிலாள வர்க்கமும், வெகுஜனங்களும் இலங்கையில் இழைக்கப்பட்ட துரோகங்களுடனான கணக்குவழக்குகளை தீர்த்துக் கொள்ள உடனடியாக கிளர்ந்து எழும் என்பதை இங்கு திட்டவட்டமாக குறிப்பிட்டாக வேண்டும். முன்னெருபோதும் இல்லாத அளவில் உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட அபிவிருத்தியுடன் சிருஷ்டிக்கப்பட்ட தொழிலாள வர்க்கத்தின் புறநிலை ரீதியான அனைத்துலக ஐக்கியம் என்ற சக்திவாய்ந்த காரணி ஒரு முக்கிய பாத்திரத்தினை வகிக்கின்றது. ஈழம் போராட்டத்தின் அனைத்துலகமயமாக்கம் இதனை நிரூபித்துள்ளது. இந்த புறநிலை அபிவிருத்திகளில் இருந்து உலக சோசலிசப் புரட்சியின் கட்சியை கட்டி எழுப்பும் உடனடித் தேவை ஊற்றெடுக்கின்றது.

சமசமாஜ — கம்யூனிச — நவசமசமாஜ — இ. தொ. கா. வினதும் மற்றும் மத்தியவாத கட்சிகளதும் துரோகத் தலைமை, சிங்கள – தமிழ் தொழிலாளர்கள் பிற்போக்கு முதலாளித்துவ அரசினைத் தூக்கி வீசி, ஒரு தொழிலாளர் — விவசாயிகள் அரசாங்கத்தினை அமைக்கும் சோசலிச வேலைத்திட்டத்தின் ஒரு பாகமாக தமிழ் தேசிய பிரச்சனையைத் தீர்த்து வைக்க ஒடுக்கப்படும் மக்களை அணி திரட்டுவதில் முன்னணிப் பாத்திரம் வகிப்பதை தடை செய்தன.

தொழிலாளர் வர்க்க கட்சிகளையும், அமைப்புக்களையும் கொண்ட ஒரு ஐக்கிய முன்னணியை நிறுவி பாசிச இராணுவ சர்வாதிகார மிரட்டலை தோற்கடிப்பதற்கான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் ஆரம்பிப்பு இலங்கை – தமிழ் ஈழம் ஐக்கிய சோசலிச சோவியத் குடியரசினை நிறுவும் பொருட்டு தமிழ் தேசிய இனத்தினையும் கிராமிய ஏழைகளையும் தொழிலாள வர்க்கம் அணிதிரட்டுவதற்கான சாத்தியத்தினை ஏற்படுத்தி உள்ளது. ஒரு ஐக்கிய முன்னணியின் கீழ் ஒரு பாதுகாப்பு நடவடிக்கையின் ஒரு பாகமாக நடவடிக்கை கமிட்டிகளும், பாதுகாப்பு கமிட்டிகளும் அமைக்கப்பட்டமையானது தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகரத் தலைமைப் பிரச்சனையை தீர்த்து வைத்து, முதலாளித்துவ அமைப்பைத் தூக்கி வீசும் எதிர்த்தாக்குதல் போராட்டத்துக்கு அவசியமான தொழிலாளர்களின் சோவியத் வீரர்களையும், படைப்பிரிவுகளையும் பரிணமம் செய்வதற்கான வளங்களை உள்ளடக்கிக் கொண்டுள்ளது. இந்தப் புரட்சிகர வளங்களை இது உள்ளடக்கிக் கொண்டுள்ளதென்பதை அறிந்து கொண்டே துரோகத் தலைவர்கள் ஐக்கிய முன்னணியை எதிர்க்கின்றார்கள்.

பாசிச, இராணுவ மிரட்டல்களைத் தோற்கடிக்க தொழிலாள வர்க்க கட்சிகளாலும், அமைப்புக்களாலும் ஐக்கிய முன்னணிக்கு எதிராக சமசமாஜ கட்சித் தலைவர்கள் பொனபாட்டிச பிரேமதாச ஆட்சியை அவசரகால சட்டத்தினை நீக்கும் படியும் 'அவசரகால சட்டத்தை நியாயப்படுத்தும் எதையும் செய்ய வேண்டாம்' எனவும் தொழிலாளர்களுக்கு கட்டளையிட்டுள்ளார்கள். இவர்கள் சிபார்சு செய்வது என்ன? கடந்த காலத்தில் தொழிலாளர்கள் மாபெரும் வர்க்கப் போராட்டங்கள் மூலம் வென்றெடுத்த ஒவ்வொரு உரிமையையும் எந்தவொரு பாராட்டமும் இல்லாமல் தியாகம் செய்ய வேண்டும் என்கிறார்கள் ஸ்டாலினிசத் தலைவர்கள், பாராளுமன்றத்தில் உள்ள அனைத்து கட்சிகளும் — யூ. என். பி., சி. ல. சு. க. உட்பட – நிறுவும் ஒரு தற்காலிக அரசாங்கத்தின் மீது தொழிலாளர்களை நம்பிக்கை வைக்கும்படி வேண்டுகின்றார்கள் நவசமசமாஜ தலைவர்கள் இதற்கெல்லாம் அப்பால் சென்றுள்ளனர். 'சமாதானத்தை ஏற்படுத்த' இந்த தற்கால அரசாங்கம் மக்கள் விடுதலை முன்னணி பாசிஸ்டுகளையும் உள்ளடக்க வேண்டும் எனப் பிரச்சாரம் செய்கின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள், ஈ. பி. ஆர். எல். எப். தலைவர்கள் தாம் இலங்கை, இந்திய ஆளும் வர்க்கங்களுடனான தமது கலந்துறவாடல் போக்குகளை நியாயப்படுத்த தொழிலாள வர்க்கத் தலைவர்களின் இந்தத் துரோகங்களைப் பயன்படுத்துகின்றார்கள் என்பதில் சந்தேகத்திற்கே இடமில்லை. அத்தோடு தமது காட்டிக் கொடுப்புக்கு எதுரான எதிப்புக்களை எதிர்த்து எதிர்த்தாக்குதலில் அவர்கள் ஈடுபடுவதாடு தமிழ் தொழிலாள வர்க்கமும், கிராமிய ஏழை மக்களும் ஒரு பாட்டாளி வர்க்கத் தீர்வின் பக்கம் திரும்புவதை தவிர்க்க முயல்கின்றன.

சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ, இ. தொ. கா. மத்தியவாத துரோகிகளுக்கு எதிராகக் கிளர்ந்து எழும் இலங்கைத் தொழிலாள வர்க்கம் ஆளும் வர்க்கத்தின் – பாசிச இராணுவ தயாரிப்புக்களை தோற்கடிப்பதோடு தேசிய சுயநிர்ணய உரிமைக்கான தமிழ் மக்களின் போராட்டத்துக்குத் தலைமை வழங்கும் அதன் மூலம் இந்திய துணைக் கண்டத்தின் சோவியத் சோசலிச குடியரசின் ஒரு பகுதியாக இலங்கை – ஈழம் சோவியத் சோசலிச குடியரசினை நிறுவுவதை நோக்கி அவர்களை இட்டுச் செல்லும்.

தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகர தலைமை நெருக்கடியை தீர்த்து வைப்பது அத்தகைய ஒரு போராட்டத்துக்கான ஓர் தீர்க்கமான தயாரிப்பாகும், உலக ஏகாதிபத்தியத்தின் மரண நெருக்கடியின் மத்தியில் அனைத்துலக ரீதியில் புரட்சிகரப் போராட்டங்கள் வெடிப்பதைக் கண்டு, சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு மட்டுமே இத்தயாரிப்புக்களை சரியாகச் செய்யப் போராடுகின்றது. அதன் இலங்கைக் கிளையான புரட்சிக கம்யூனிஸ்ட் கழகம், சோசலிச கொள்கைகளுக்கு அர்ப்பணம் பூண்ட ஒரு தொழிலாளர் — விவசாயிகள் அரசாங்கத்தின் வடிவில் ஒடுக்கப்படும் மக்களின் ஆதரவுடன் தொழிலாளர் அதிகாரத்தை நிறுவும் அனைத்துலக வேலைத்திட்டத்துடன் இணைந்து, சிங்கள, தமிழ் தொழிலாளர்களை போராட்டத்திற்கு அணிதிரட்டுவதில் ஈடுபட்டுள்ளது.

சகல தொழிலாளர்களையும் கிராமிய ஏழை மக்களிடையேயுள்ள போராளிகளையும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருமபடியும் அவர்கள் முன் உருவாகியுள்ள வரலாற்றுப் பணிககு தோள் கொடுக்குமாறும் நாம் வேண்டுகின்றோம்.

# கொட்டகலை தோட்டப்பகுதியில் இராணுவத்தினரின் அட்டகாசம்

கொட்டகலை தொழிற்பயிற்சி நிலையத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் நாளாந்தம் அப்பகுதி தொழிலாளர்களை துன்புறுத்திவருவதாக தொழிலாளர்கள் 'தொழிலாளர் பாதை'க்கு தெரிவித்தனர். டிரேட்டன், லூட்டன், ருெசிற்ரா தோட்டத் தொழிலாளர்கள் இத்தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர்.

சின்ன மண்வெட்டித் தோட்டத்தை சோந்த என். பத்மநாதன் என்ற தொழிலாளியை இராணுவத்தினர் கைது செய்து ஒரு இரவு பூராகவும் முகாமில் வைத்து துன்புறுத்தியுள்ளனர். இரு வாரத்திற்கு முன்பு கொழும்பில் இருந்து வந்து இரவு ஆறரை மணியளவில் கொட்டகலை பஸ்நிலையத்தில் இறங்கி வீட்டிற்கு போய்க் கொண்டிருக்கும் போது இவர் கைது செய்யப்பட்டார். அத்துடன் லூட்டன் தோட்டத்தை சேர்ந்த பாண்டியனும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு தாக்கப்பட்டார். இவர் லூட்டன் தோட்ட இ. தொ. கா. தொழிற்சங்க கிளையின் உபதலைவராவர். இவ்வாறு பல தாக்குதல் சம்பவங்கள் இடம் பெற்றன. இரவு 6 மணிக்கு பிற்பாடு அப்பகுதியில் நடமாட முடியாது உள்ளதாக அவர்கள் முறையிட்டனர்.

ஜே. வி. பி யிடமிருந்து தோட்டங்களை பாதுகாப்பதற்கு, இராணுவத்தை தோட்டங்களுக்கு அனுப்புவதற்கு முன்னணியில் நின்ற இ. தொ. கா. தொண்டமான் தலைமை, கொட்டகலையில் உள்ள இ. தொ. கா. வுக்கு சொந்தமான தொழிற்பயிற்சி நிலையத்தை இராணுவம் முகாம் அமைப்பதற்காக வழங்கினர். இன்று இராணுவத்தினர் தமது சங்கத்தவர்களையே துன்புறுத்தி வரும்போதுகூட இத்தாக்குதல்களை மூடி மறைப்பதில் முன்நிற்கின்றனர்.

யூ. என். பி. அரசாங்கம் 50 வீதமான தொழிலாளர்களின் வேலைகளுக்கு வேட்டு வைக்கும் உலக வங்கியின் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நோக்குடனேயே இராணுவத்தை தோட்டங்களுக்கு அனுப்பியது என்பதை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் தொழிலாளர் பாதையும் சுட்டிக் காட்டி

—10ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com



9ம் பக்கத் தொடர்ச்சி

தொடர்ந்து சுட்டிக் காட்டி வந்தது. இத்தகைய தாக்குதலுக்கு எதிராக தொழிலாளர்கள் ஏற்கனவே வேலை நிறுத்த போராட்டத்தினை ஆரம்பித்திருந்தனர். தொழிலாளர்களின் வேலைகளுக்கு வேட்டுவைக்கும் வகையில் தோட்டங்களை துண்டாடி குடியேற்றத் திட்டங்களை அமைக்கும் அரசாங்கத்தின் திட்டத்திற்கு எதிராக ஒருசெல்ல பின்னோ ா தோட்டத்தில் மூன்று நாள் வேலை நிறுத்தமும், தலவாக்கலை வட்டகொட தோட்டத்தில் ஒரு நாள் வேலை நிறுத்தத்தையும் தொழிலாளர்கள் நடாத்தியுள்ளனர். இ.தொ.கா, ஐ.தொ.கா. ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜ சந்திரசேகரன் தலைமைகள் யூ.என்.பி. அரசாங்கத்தின் தாக்குதலுக்கு எதிராக எத்தகைய போராட்டங்களுக்கு ஒழுங்கு செய்வதை நிராகரித்து, இவ்வரசாங்கத்திற்கு முண்டு கொடுத்து வரும் வேளையில் தொழிலாளர்கள் கீழ்மட்டத்திலிருந்து தமது எதிர்ப்பைத் தெரிவிக்க ஆரம்பித்துள்ளனர். இவற்றை முளையிலேயே அழிக்கும் நோக்குடனேயே இராணுவத்தினர் தோட்டத் தொழிலாளர்களை துன்புறுத்த ஆரம்பித்துள்ளனர்.

# பொகவந்தலாவ சம்பியன் தோட்ட தொழிலாளர் மீது பொலிஸ் பாய்ச்சல்

பொகவந்தலாவ தோட்டத்தில் எட்டுப்பேரை கொண்ட பொலிஸ் குழுவொன்று கள்ளச்சாராயம் தேடுவதாக கூறியபடி நுளைந்து தோட்ட தொழிலாளரை தாக்கியுள்ளது. தொழிலாளர் இதற்கெதிராக அவர்களை விரட்டியடித்தனர். அச்சமயம் பொலிஸ்காரர் சுட்டதினால் இரு தொழிலாளர் படுகாயமடைந்து பின்னர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

இச்சம்பவத்தையிட்டு தோட்ட லொறி ஒன்றில் தொழிலாளர் செல்கையில் வழியில் தலவாக்கொல்ல பொலிஸ் நிலைய முன் வாகனத்தை நிறுத்திய பொலிசாரால் 10 பேரை அவ்விடத்தில் கைது செய்துள்ளனர். ஸ்டாலிசை தொழிற்சங்கத்தை சேர்ந்த தொழிலாளரே இங்குள்ளனர். ஒன்றரை நாட்கள் அடைத்துவைத்த பின் பொலிஸார் அப்பத்துப்பேரையும் விடுதலை செய்ததாக தகவல் கிடைத்துள்ளது.

இச்சம்பவம் தோட்ட தொழிலாளர் பாதுகாப்பு குழுக்களை கட்டியெழுப்ப வேண்டியுள்ள தேவையை மீண்டும் வலியுறுத்துகின்றது. அரச படையினரின் வேட்டையிலிருந்தும் தமது தொழில், உயிர் வாழுமுரிமையை பேண தொழிலாளர் ஒருங்கிணைந்து பாதுகாப்பு குழு அமைக்கும் தேவை ... தொழிற்சங்கங்களில் வலியுறுத்தல வேண்டும்.

உலக வங்கித் திட்டப்பிரகாரம் யூ. என். பி. அரசாங்கம் தோட்டத்துறையை அழிக்க எடுத்துள்ள நடவடிக்கைகளையிட்டு தோட்ட புறமெங்கும் தொழிலாளர் மத்தியில் பலத்த எதிர்ப்பு வெடித்தெழுந்துள்ளது. காணியற்ற வறிய மக்களுக்கு தோட்ட நிலங்களை பகிர்ந்து கொடுக்கிறார்கள் என்ற போர்வையில் குடியேற்ற திட்டம் அமைத்து சிங்கள, தமிழ் தொழிலாளரை பிளவு படுத்தி இனவாதத்தை கிளப்ப யூ. என். பி. முதலாளித்துவ அரசாங்கம் பின்வருமாறு செயற்படுகின்றது.

நுவரெலியா மாவட்டத்தில் மாகாணசபை மூலமாக வறிய சிங்கள கிராமமக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ள நிலங்களின் விபரங்கள் காணி யாணையாளரால் மாகாணசபை உறுப்பினர்களுக்கு பின்வருமாறு அனுப்பப்பட்டுள்ளது. 45 தோட்டப்பிரிவுகளில் இவ்வாறாக மொத்தம் 2837.29 ஏக்கர்கள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளதையிட்டு தமது எதிர்ப்பை வேலைநிறுத்தங்கள் மூலம் வெளிக்காட்டியுள்ளனர்

| | | ஏக்கர் |
|---|---|---|
| 1. | கிளண்டில் கோர்த்தி பிரிவு | 42.00 |
| 2, | அப்புஸ்தனே தெபட்டன் | 49 40 |
| 3, | கெளிங்வத்த ஸீடெனஸிமலே | 13.58 |
| 4, | லெ ஞக | 12,35 |
| 5; | ஸீடெதட்டன் குல்ங்வததை | 29.64 |
| 6. | வெளி ஓயா அக்கர ஓயா | 24,70 |
| 7. | எபோட்ஸ்சிபி (கன்னிடப்பா) | 37 50 |
| 8. | தரவள கீ/பி | 34.58 |
| 9. | வனராஜா சவுத்நோர்த் என். வி. | 86.45 |
| 10. | பின்னோயா ரொசலே பிரிவு | 654.55 |
| 11, | போகவான - பிடெட்மெவல் | 4.94 |
| 12. | புரன்ஸ் வக் | 79.4 |
| 13. | கரலிஞ - ஆக்ராபிரிவு மலே 1, 3 — 9 | 111.15 |
| 14. | பெய்லோன் | 34.58 |
| 15. | பெற்ராஸோ | 11.11 |
| 16. | கியுவ் - சுப்பர் டெல்ரோ | 18.52 |
| 17. | லக்சபான - வாழமலே | 66.69 |
| 18 | பெதண்டி | 74 10 |
| 19. | நோர்வூட் | 11.60 |
| 20 | ரெஸ் போண் - மிட்போட் | 150.67 |
| 21. | வெஞ்சர் | 123.50 |
| 22. | ரெனன் அட்டன் பூல்பெல் சென்எலியாஸ் | 375.44 |
| 23. | கைரேசியா | 79.40 |
| 24. | கிருஸ்லஸ்பாம் | 7.43 |
| 25. | கிரெம்கலி | 12·35 |
| 26. | டிம்புள கீ/பி | 7.42 |
| 27. | டிரேற்றன் கே ஓ டிவிசன் | 4.94 |
| 28. | கெனிலித்த | 9;·8 |
| 29. | மேபீல்ட் - சாமஸ் டிவிசன் | 4.94 |
| 30. | மவுண்ட் வேணன் - மத்திய கீழ் பிரிவு | 9:88 |
| 31. | ஸிடோனி கிளிப் - லொகசின் | 29.66 |
| 32. | எலிபண்ட் 3457ம் நம்பர் பீதுருதாலகல பிரிவு | 103 41 |
| 33. | பெயர்வெல் - பெயர்பீங்டி வி | 49.2 |
| 34. | ஹொலிருட் கீ/பி 16626 மலே | 40.00 |
| 35. | ட்ரூப் - கொலணி பிரிவு | 89 90 |
| 36. | வட்டகொடை - ஒக்ஸிபெட் கீ/பி மே/பி | 123.5 |
| 37. | கோணபிட்டிய, கிருகொல, மெரிகோல்ட் | 86.45 |
| 38. | ஹேபோலஸ்ட் 3ம் நிவ் | 9 88 |
| 39 | சென்லீயனர்ட்ஸ் | 7 42 |
| 40. | பிளையலண்ட் - கீ/பி மே/பி | 41.00 |
| 41. | வோலிடிமார் | 19 76 |
| 42. | கோன், கி ரஸிலின் | 12.35 |
| 43. | இன் லோவர் பூண்டுலாயா | 7.41 |
| 44. | கிரோ கீ/பி | 6.17 |
| 45. | வெதமல்ல - ரம்பொட பிரிவு | 46.93 |
| | | — 2837.29 |

மேற் குறிப்பிட்ட விதத்தில் வறிய கிராம மக்களை குடியேற்றும் திட்டம் என்ற விதத்தில் சுவீகரிக்கப்படவுள்ள 2837.29 ஏக்கர் நிலங்களை உண்மையில் தோட்டத் தொழிலாளர் வேலைபார்க்கும் தோட்டங்களேயாம். வட்டகொடை ஒக்ஸிபெட் கீ/பி மே/பி தொழிலாளர்கள் தமது பகுதியில் 123.5 ஏக்கர்கள் சிங்கள குடியேற்றத் திட்டமாக்கப்படுவதை எதிர்த்தும் தொழிலை பேணவும் ஜனவரி 23ம் திகதி 1500 பேர் பங்குபற்றிய வேலை நிறுத்த போராட்டத்தை நடத்தினர். பின்ஒய தோட்டத்தில் இதுவரை 300 தொழிலாளர்வரை தொழில் வாய்ப்பற்றவராய் உள்ளனர். அது மட்டுமல்ல தோட்டங்களில் கிராம மக்களை குடியமர்த்த தேவையான சூழ்நிலையை ஏற்படுத்தவே இவை நடைபெறுகின்ற தன்மையை தொழிலாளர் நன்குணர்ந்துள்ள நிலைமையிலேயே இந்த எதிர்ப்பு போராட்டங்கள் நடைபெறுகின்றது.

## சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்!

கொழும்பு — 10, 1 — ஆவது மாளிகாகந்தை ஒழுங்கை, இலக்கம் 90, இடத்தில் வசிக்கும் ஆனந்த வக்கும்புறவினால் மஹரகம நாகஹவத்தை வீதி, 51 ஆம் இலக்கத்திலுள்ள பியதாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



இந்தக் கட்டுரை சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் "தொழிலாளர் பாதை"
—— இதழ் எண். 28, ஜனவரி 1990ல் இருந்து பிரசுரமாகின்றது. ——

# 1989: அரசியல்

(நான்காம் அகிலத்தின் காலாண்டு ஜூலை-செப்டம்பர் 1989 இதழின் தலையங்கத்தின் தமிழாக்கம்.)

1989ஆம் ஆண்டு வரலாற்றில் 'அதிசயங்களின் ஆண்டு' அரசியல் புரட்சியின் ஆண்டாகக் குறிக்கப்பட்டு இருக்கும். பெய்ஜிங்கிலிருந்து பெர்லின் வரை பிரமாண்டமான தொழிலாள வர்க்கத்தின் இயக்கம் தவாலாகிவிட்ட அவமானகரமான ஸ்டாலினிச ஆட்சி முறைகளுக்குள் எரிமலைபோல் வெடித்தெழுந்தது. இந்த ஆட்சி முறைகள் சோசலிசத்தைக் காட்டிக்கொடுத்தவை. பல பத்து ஆண்டுகளாக சர்வதேச தொழிலாளர் இயக்கத்தில் ஏகாதிபத்தியத்தின் பிரதான ஏஜெண்டாக சேவை செய்து இருக்கின்றன.

ஏப்ரல், ஜூன் மாதங்களுக்கு இடையில் சீன ஸ்டாலினிச ஆட்சியானது, தொழிலாளர்கள், மாணவர்களின் பெரும் திரளான ஆர்ப்பாட்டங்களை தாங்க முடியாமல் தள்ளாடியது டியான்மென் சதுக்கத்தில் ரத்தக் களறியான படுகொலை அதைத் தொடர்ந்து தேசிய அளவின் தான மிருகத்தனமான ஒடுக்குமுறை ஆகிய இவை அதிகாரத்துவம் ஒரு உண்மையை உணர்ந்ததை எடுத்துக் காட்டுகிறது. அதிகாரத்துவத்தின் நேரடியான ஆட்சி முறைக்கு நேரடியான பயமுறுத்தல் ஏற்பட்டு இருக்கிறது என்பதுதான் அந்த உண்மை. ஏனெனில் தொழிலாளி வர்க்கம் ஸ்டாலினிஸ்டுகளின் முதலாளித்துவ சார்புடைய கொள்கைகளை எதிர்த்தும், 1949 புரட்சியின் சமூக வெற்றிகளை முறையாகப் பிரித்து அழித்து விடுவதை எதிர்த்தும் ஆத்திரம் அடைந்து மிகப்பெரிய எதிர்ப்பு இயக்கம் என்ற முன் வரிசைக்கு வந்து உள்ளனர். ரத்தக்குளிப்பானது டியான்மென் சதுக்கத்தைக் கைப்பற்றியதை ஒரு முடிவுக்கு கொண்டு வந்தது, இந்த ஒடுக்கு முறையானது ஸ்டாலினிச ஆட்சியை ஸ்திரப்படுத்தவில்லை என்பது ஏற்கனவே தெளிவானது. அதற்குமாறாக தொழிலாள வர்க்கம், வெகுஜனங்கள் இவர்கள் கண்ணோட்டத்தில் ஸ்டாலினிச ஆட்சியின் அரசியல் நியாயத்தன்மை அழிந்துவிட்டது என்பது தெளிவாக இருக்கிறது. மக்கள் இயக்கத்தின் அடுத்த கட்டம் இந்த ஆட்சி முறையுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவது என்பதாக இருக்காது. இந்த ஆட்சி முறையை தூக்கி எறிதல் என்பதன் அவசியத்தையே அதன் துவக்க நிலையாக கொண்டிருக்கும்.

இதன்பின் ஒரு மாதத்திற்கு உள்ளாகவே சோவியத் சுரங்கத் தொழிலாளர்கள், "நாடு தழுவிய" வேலை நிறுத்தப் போராட்டத்தை துவக்கினார்கள். இப்போராட்டம் தொழிலாள வர்க்கம் ஸ்டாலினிச அதிகாரத்துவம் இவற்றிற்கு இடையே பாலம்கட்டி அமைக்க முடியாத நீண்ட ஆழமான பள்ளத்தையே அம்பலப்படுத்தியது. வேறு வழியில்லாமல் கோர்பச்சேவ் சுரங்கத் தொழிலாளர்களை சரிக்கட்டுவதற்காக சில சலுகைகளை உத்தரவிட்டார். ஆனால் இந்த சலுகைகளினால் வேலை நிறுத்தக்காரர்களின் கோரிக்கைகள் படுபிற்போக்கான பொருளாதாரத் திட்டமாகிய பெரஸ்த்ரொய்காவை (மறுசீரமைப்பை எதிர்த்துத்தான் செய்யப்பட்டது) என்ற உண்மையை மறைக்கமுடியவில்லை. நியூயார்க் டைம்ஸ் பத்திரிகையின் மாஸ்கோ செய்தி நிருபர் ஜூலை 26ல் வேலை நிறுத்தம் முடிவடைந்தபொழுது எழுதியதாவது :-


"சோவியத் நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்களின் முதல் ஆரம்ப அறிக்கையில் கூறப்பட்டுள்ள ஒரு கோரிக்கை பெரும்பாலும் கவனிக்கப்படாமல் விடப்பட்டது. இப்பொழுது சுரங்கத் தொழிலாளர்கள் தற்காலிக வெற்றியில் வேலைக்குத் திரும்பிக்கொண்டு இருக்கின்றனர். இந்தக் கோரிக்கை மிகையில கோர்பச்சேவுக்கு ... நடுக்கத்தை ஏற்படுத்துவதாக இருக்க வேண்டும்.

"சோப் ரேஷன் குளிர்கால காலணிகள் இரவு போனஸ் அதிக அரசியல் அதிகாரம் ஆகியவற்றைச் சுரங்கத்தொழிலாளர்கள் கோரினார்கள், இவற்றுடன் கூடவே சுதந்திரத்துடன் உலவிவந்து பெரும் சொத்துக்களைக் குவித்துள்ள தனியார் தொழில்நடத்துபவர்களை ஒழிக்கவேண்டும் அல்லது கடுமையாக கட்டுப்படுத்த வேண்டும் என்பதுதான் அந்தக்கோரிக்கை. திரு. கோர்பச்சேவ் அவர்கள் வளர்ப்பதற்கு முயன்று கொண்டிருக்கும் இந்தப்புதிய பொருளாதார முறைக்குப்பெரிய எதிர்ப்பைத்தோற்றுவித்துள்ளது.

"முதல் வேலை நிறுத்தம்முடிவடைந்த பிறகு அக்டோபர் மாத அளவில் கிரெம்ளின் தனது வாக்குறுதியை நிறைவேற்ற தவறியதால் புதிய வேலை நிறுத்தங்கள் தோன்றின. சுப்ரீம் சோவியத் தான் நிறைவேற்றிய வேலை நிறுத்தத் தடுப்புச்சட்டத்திற்கு எதிராக நாடு தழுவிய வெளிநடப்பு ஏற்படும் என்ற அச்சுறுத்தலும் தோன்றியது. (இந்த சுப்ரீம் சோவியத், அதிகாரத்துவத்தினாலும், குட்டி முதலாளித்துவ அறிவு ஜீவிகளின் பிரதிநிதிகளாலும் ஆதிக்கம் செலுத்தப்படுகின்றது).

சோவியத் சுரங்கத் தொழிலாளர்களால் ஊக்கிவிடப்பட்டு கிழக்கு ஜெர்மனி தொழிலாள வர்க்கம் தெருக்களில் திரண்டனர் அவர்களுடைய மகத்தான ஆர்ப்பாட்டங்களினால் ஹோனகர் ராஜினமா செய்யும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார். அவருக்குப் பதிலாக போலீஸ் அதிகாரி ஈகென் கிரன்ஸ் நியமிக்கப்பட்டார். இதனால் தொழிலாள வர்க்கத்தின் கோபம் தணியவில்லை. ஹோனகர் மீது கொண்ட வெற்றியால் அவர்களுடைய தன்னம்பிக்கை பெரிதும் வலிவடைந்துள்ளது. இந்தக் கட்டுரை அச்சிடப்படும் நேரத்தில் டிரஸ்டன், லீப்சிக், மார்க்டிபர்க் உள்ளும் பலநகரங்களில் லட்சக்கணக்கான மக்களின் ஆர்ப்பாட்டங்கள் தொடர்கின்றன.

ஹங்கேரி, போலந்து ஆகிய நாடுகளில் ஸ்டாலினிச ஆட்சி முறைகள் தகர்ந்து சீரழிவது மூச்சுத் திணரக்கூடிய வேகத்தில் நடைபெறுகின்றது. ஒருசமயம் ஹங்கேரியன் கம்யூனிஸ்ட் கட்சி என்று கூறப்பட்டதானது தன்னைத்தானே அழித்துக் கொண்டுவிட்டது முதலாளித்துவ சொத்து உறவு முறைகள் மார்க்கட் பொருளாதாரம் ஆகியவற்றின் அடிப்படையில், முதலாளித்துவக் குடியரசை மீண்டும் ஸ்தாபிப்பது தனது நோக்கம் என்பதனை அறிவித்துள்ளது. போலந்து ஸ்டாலினிஸ்டுகள் குட்டி முதலாளித்துவ பாப்பிறை அன்டேரியன் களாகிய சாலிடாரிட்டிக்கு (Solidarity) அதிகாரத்தை விட்டுக் கொடுத்துள்ளனர் இந்த சாலிடாரிட்டி அரசாங்கம் தேசியமயமாக்கப்பட்ட சொத்தை ஒழித்துக்கட்டும் திட்டத்தை துவக்கியுள்ளது. தொழிலாளவர்க்கத்தைபஞ்சையாகப் பராரிகளாக ஆக்கும் போக்கில் உள்ளனர். போலந்து நாட்டைஐரோப்பிய அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பொருளாதாரக்காலனிநாடாக மாற்ற அமைக்கும் செயலில் ஈடுபட்டுள்ளனர்.



டியானன்மென் சதுக்கத்தில் லட்சக்கணக்கில் திரண்ட தொழிலாளர்களும், மாணவர்களும்

சர்வதேச முதலாளி வர்க்கத்தின் அரசியல் இலக்கிய விபச்சாரிகள் ஸ்டாலினிச அரசுகள் சிதறுண்டு போவதை மார்க்சிசம் மீது முதலாளித்துவம் கொண்டுள்ள வெற்றி என்று சாக்கக்கூக்குரலிடுகின்றனர். இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை. தங்களைத் தானே மெச்சிக் கொள்ளும் இந்தக் கூச்சல்களுக்கு எவ்விதமான விஞ்ஞானபூர்வமான நியாயம் கிடையாது. ஏனென்றால் ஸ்டாலினிசத்திற்கும் மார்க்சிசத்திற்கும் சம்பந்தம் உண்டு என்ற மோசத்தன்மை வாய்ந்த அறிவற்ற பொய்யை அது அடிப்படையாகக் கொண்டது.

ஸ்டாலினிசமும், அதன் போலீஸ் அரசு ஆட்சிகளும் சிதறுண்டு போவது மார்க்சிசத்தின் அழிவைக் குறிக்கவில்லை, அந்த அழிவானது உலகசோசலிசப் புரட்சி சக்தி வாய்ந்து புத்துயிர் பெற்றுத் துவக்கநிலையில் உள்ளதையே குறிக்கிறது உண்மையில் ஏகாதிபத்தியம் தான அதிகாரத்துவ அரசுகள் தகர்ந்து வீழ்வதைக்கண்டு பயப்படவேண்டும் ஏனெனில் இரண்டாம் உலக யுத்தத்திற்குப்பின்னால் உலகத் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகரப் போராட்டத்தை நசுக்குவதற்கும் முதலாளித்துவ ஆட்சியை ஸ்திரப்படுத்துவதற்கும் அது அதிகாரத்துவ அரசுகளையே நம்பி இருந்தது.

'நான்காம் அகிலம்' இதழின் அண்மைப் பதிப்பில் கூறியதாவது "சோசலிஸ்டுப் புரட்சி என்ற அபாயத்திற்கு எதிராக ஏகாதிபத்திய நலன்கள் இந்த விசேட அரசியல் ஏற்பாட்டினால் பாதுகாக்கப்பட்டிருக்கா விட்டால் யுத்தபிற்காலமுதலாளித்துவ விஸ்தரிப்பு என்பது நிகழ்ந்து இருக்காது. மேற்கு ஐரோப்பிய தொழிலாள வர்க்கத்தை ஒரு சிராகக் காட்டிக் கொடுத்ததன் பிரதிபலனாக ஏகாதிபத்தியத் தலைவர்கள் இரண்டாம் உலகப்போர் இறுதியில் கிழக்கு ஐரோப்பாவில் சோவியத்யூனியனின் மேலாதிக்கத்தை அங்கீகரித்தனர்" 1988 ஜூலை-டிசம்பர் இதழ், பக்கம்...)

இரண்டாம் உலக யுத்தத்தின் பிற்பாடாக 'இடைவெளி' நாடுகள் (buffer states) ஸ்தாபிக்கப்பட்டன. இது சோவியத் அதிகாரத்துவம் உலக ஏகாதிபத்தியம் இவற்றிற்கு இடையே ஏற்பட்ட யால்டா, பொட்ஸ்டாம் ஒப்பந்தத்தின் விளைவேயாகும் சர்ச்சில் தனது நூலில் இதனை நினைவுகூறி குறிப்பட்டது போல 'ஐரோப்பாபடத்தின் குறுக்கே ஒரு கோடு வரையப்பட்டது' கிரேக்க நாட்டிலோ அல்லது மேற்கு ஐரோப்பிய நாடுகளிலோ முதலாளித்துவத்திற்கு எவ்வித சவாலும் விடப்படமாட்டாது என்று உறுதிமொழி கொடுத்ததன் அடையாளமாக ஸ்டாலின் அந்த ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்டான சோவியத் செல்வாக்கு உள்ளபகுதிகளில் ஏகாதிபத்தியவாதிகள் கிரெம்ளினின் ஆதிக்கத்தை ஒத்துக்கொண்டனர். சமாந்திர அந்த உடன்பாடு இந்தபகுதிகளில சொத்துரிமை முறைகளில் மாற்றங்கள் அதிகாரத்துவ முறையில் வகுக்கப்பட்டு புகுத்தப்பட்டபோதிலும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் தொழிலாள வர்க்கத்தின் சுதந்திரப்புரட்சிப்போராட்டங்கள் நசுக்கப்படும் என்று அவர்கள் புரிந்து கொண்டனர்

யுத்தப்பிற்கால ஐரோப்பிய புரட்சியை நசுக்குதல் என்ற உள்ளடக்கத்தில் ஜெர்மனி இரண்டாகப் பிரிக்கப்பட்டு ஜெர்மன் ஜனநாயகக்குடியரசு DDR ஸ்தாபிக்கப்பட்டது. இது ஒரு ஸ்டாலினிச போலீஸ் அரசாக அமைக்கப்பட்டது. இது ஐரோப்பிய, ஜெர்மன் தொழிலாள வர்க்கத்திற்கு கொடுத்த பெரிய அடியாகும். சொத்து அரசுடமையாக்கப்பட்டது ஒரு முற்போக்கு செயல் என்று கருதப்பட்டாலும் அதனுடைய முக்கியத்துவம் கீழ்கண்ட இருகாரணங்களால் பயனற்றது ஆகி விட்டது .(1) ஜெர்மன் தொழிலாள வர்க்கத்தைசீரரீதியாக இரண்டாகப் பிரித்ததன் அரசியல் பலாபலன்கள் (2) ஸ்டாலினிச ஆட்சிமுறையின்மிருகத்தனமான ஆட்சி முறையினால் மேற்கு ஜெர்மனி தொழிலாள வர்க்கத்தின்இடையே வளர்ந்த அரசியல்உணர்வின்பலாபலன்கள், ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் கிரிமினல் குற்றங்களினால் 1914க்கும் 1945க்கும் இடைப்பட்ட வருடங்களில் முற்றிலும் மதிப்பிழந்த ஜெர்மன் சமூக ஜனநாயகக் கட்சி மறுபடியும் அரசியல் புத்துயிர் பெற்றது. ஸ்டாலினிசதுரோகத்தைத்தவிர வேறுஎதனாலும் அக்கட்சி புத்துயிர் பெற்றிருக்க முடியாது.

கிழக்கு ஜெர்மனியில் சொத்துக்கள் அரசுடமையாக்கப்பட்டது. சோசலிசத்தைநோக்கிய உண்மையான நடவடிக்கை என்று கூறமுடியாது. ஏனெனில் மேற்கு ஜெர்மனியிலும் இதர மேற்கு ஐரோப்பாவிலும் முதலாளித்துவம் பாதுகாக்கப்படும் என்று கிரெம்ளின் கொடுத்த உத்தரவாதத்தின் ஒரு பிரிக்கமுடியாத பாகமாகவே ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு (DDR) அமைக்கப்பட்டது. உண்மையில் ஜெர்மனியை பிரிவினை செய்ய ஒப்புக்கொண்டதன் மூலம் ஸ்டாலினிஸ்டுகள் அமெரிக்கபிரிட்டிஷ் பிரான்சு ஏகாதிபத்தியங்களுக்கு அவர்களுக்கு மிக்க தொந்தரவு கொடுத்த ஒரு பிரச்சினையை தீர்ப்பதற்கு உதவியது எனலாம். 30 வருடங்களுக்குள்ளாகவே இரண்டு பெரிய உலகயுத்தங்கள் நிகழ்ந்துள்ளன ஏனெனில் சரித்திர ரீதியான வளர்ச்சியில் ஐரோப்பாவில் ஏற்பட்ட தேசிய அரசு என்ற அமைப்புக்குள் ஜெர்மனியின் எல்லைகள் அமைக்கப்பட்டு கட்டுப்படுத்தப்பட்டது, ஆனால் ஜெர்மன் முதலாளித்துவத்தின் சக்தி வாய்ந்த இயக்கம் தேசிய அரசின் எல்லைகளுக்குள் அடங்கி இருக்க முடியவில்லை. ஜெர்மன் பிரிவினையானது முதலாளித்துவ ஐரோப்பாவின் யுத்த பிற்கால அரசியல் சமநிலையைப் பாதுகாக்க அவசியமானது. அதனால் தான் கிழக்கு ஜெர்மன் மக்களின் கிளர்ச்சி ஸ்டாலினிச ஆட்சி பூராவையும் கவிழ்த்துவிடும் அச்சுறுத்துவதாக இருப்பதுடன் சர்வதேசிய முதலாளித்துவத்தின் இடையே ஆழமான மனக்கலக்கத்தையும் உண்டாக்கி இருக்கின்றது. ஒரு புறத்தில் அமெரிக்க மேற்கு ஐரோப்பிய பூர்ஷுவாக்கள் ஐக்கியமான ஜெர்மனியின் பொருளாதார ராணுவ பலத்தைக் கண்டு பயப்படுகின்றனர் மறுபுறத்தில் ஜெர்மனியில் தொழிலாள வர்க்கம் ஐக்கியப்படுவதன் பெரிய ஆபத்தையும் காண்கின்றனர், ஏனெனில் அந்த நாட்டில் புரட்சிகரமான சோஷலிச பாரம்பரியம் மிக ஆழமாக உள்ளது. நியூயார்க் டைம்ஸ் பத்திரிகை வெட்கம் இல்லாமல் எழுதுவதாவது கிழக்கு மேற்கு ஜெர்மனி ஒன்றுபடவேண்டும் என ஐக்கிய அமெரிக்காவின் பரம்பரையான ஆதரவுக் கொள்கையை "பின்பற்ற ஐக்கிய அமெரிக்க நிர்வாகங்கள் மகிழ்ச்சியாக இருந்தன. ஏனென்றால் இந்த ஐக்கியம் நடக்க முடியாது என்று அவர்கட்குத் தெரியும் அந்த முறையிலேயே அதை அவர்கள் விரும்பினர்". (அக்டோபர்20, 1989)

## பாப்லோவாத சந்தர்ப்பவாதம்

ஸ்டாலினிசத்தின் சர்வதேசிய நெருக்கடியும் இரண்டாம் உலகப்போருக்குப் பின்னால் அமைக்கப்பட்ட அதிகாரத்துவ

படிப்பகம்

www.padippakam.com



# ரட்சியின் ஆண்டு

..சிகளின் அரசியல் தகர்வும் ..வகையிலும் மார்க்சிசத்தின் ..ப்பையோ அல்லது அழிவை ..ா குறிக்கவில்லை. ஆனால் .. பப்லோவாத சந்தர்ப்ப..த குழுக்களுக்கு அவமானத்..த தேடித்தந்துள்ளது. இக்..ழுவின் பிரதான பிரதிநிதி ..கிய செயலாளர் குழுமத்.. ஏர்னஸ்ட் மண்டல் ..வார். பாப்லோயிசம் நான்..ம் அகிலத்தினுள் திருத்தல்..தப்போக்காக பிந்திய 1940 ..ண்டுகளில் தோன்றியது. ..ப்லோயிசத்தின் அடிப்படைவாத..ன இரண்டு அடிப்படை ..ண்ணோட்டங்கள் வெடித்துத் ..ள்தூளாக சிதறிப்போயின.

முதலாவதாக மைக்கேல் ..ாப்லோவும் (இரண்டாம் உல..ப்போரின் பின் நான்காம் அகி..லத்தின் செயலாளர்) அவரது ..காவான மண்டலும் பின்வரு..மாறு வாதிட்டனர்:-சோவியத் ..அதிகாரத்துவத்தின் ஆதரவின் ..ழ் கிழக்கு ஐரோப்பாவில் ..அமைக்கப்பட்ட அரசுகள் ..சீரழிந்த தொழிலாளர் அரசு..களின் முன்னுதாரணங்களே அன்றி வேறு இல்லை. இவை..கள் பல நூற்றாண்டுகள் நீடிக்..கும், முதலாளித்துவத்தி..லிருந்து சோசலிசத்திற்கு மாற்றப்படுவதற்கு சரித்திர ரீதியான அவசிய அரசியல்

சரித்திரத்தின் போக்கானது இந்த 'முன்நோக்கை' கேலிக் கூத்து ஆக்கி விட்டது. இதன் கோமாளித்தனம் முழுமையாக வெட்ட வெளிச்சமாகி விட்டது. ஊனமுற்று தோன்றிய தொழிலாளர் அரசுகளின் ஜீவிய காலம் பல நூற்றாண்டுகள் அல்ல ஒரு சில பத்தாண்டுகளே என நிரூபிக்கப்பட்டு விட்டது. அதிகாரத்துவத்தின் சுயசீர்திருத்தம் என்பதைப் பொறுத்தவரையில சோவியத் யூனியன் பெரஸ்த்ரொய்காவின் பொருளாதார உள்ளடக்கமும் அது போலந்திலும் ஹங்கேரியிலும் பிரயோகிக்கப்பட்ட விதத்திலும் நாம் கண்டது என்ன? ஸ்டாலினிஸ்டுகள் செய்யக்கூடிய ஒரே 'சுயசீர்திருத்தம்' அவர்கள் ஆட்சி செய்யும் நாடுகளில் முதலாளித்துவத்தை மறுபடியும் ஸ்தாபித்து சலுகை பெற்ற அதிகாரத்துவத்தின் கணிசமான பகுதியினர் சொத்துரிமை உள்ள பூர்ஷுவாக்களாக மாற்றிக் கொள்வதுதான்!

நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழு 1953ல் ஸ்தாபிக்கப்பட்டது பாப்லோ, மண்டலினால் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்ட கேவலமான சந்தர்ப்பவாதத்தை எதிர்த்து நான்காம் அகிலத்தின் [illegible]

சேவை அவர் மெச்சுவது எல்லையற்றது. இந்த ஊழல் மலிந்த சுயநலவாதியை அவர் ''ஒருகுறிப்பிடத்தக்க அரசியல் தலைவன்'' என்று வர்ணிக்கின்றார். ஜெர்மன் மொழிப்பதிப்பில் இன்று பிரமாதமாக கொர்பச்சேவை ''20ம் நூற்றாண்டின் மிகத் திறமை வாய்ந்த அரசியல் தலைவர்களில் ஒருவராக கருத வேண்டும்'' என அறிவிக்கின்றார்

(Zweifellos zaehlt erzu den begabsten und faehigsten Politikern des Zwanzigsten Jahrhunderts')

அனைத்துலக குழு பெரஸ்த்ரொய்காவை சோவியத் ரஷ்யாவில் மீண்டும் முதலாளித்துவத்தை ஏற்படுத்தும் திட்டமே என்று அம்பலப்படுத்துவதற்கு எதிராக அத்திட்டத்தை ஆதரிப்பதே மண்டலின் புத்தகத்தின் நோக்கம். இந்த ஆட்சிமுறை உற்பத்தி சாதனங்களில் தனிச் சொத்துரிமையை சட்டரீதியாக்கி உற்சாகப்படுத்துவதன் சமுதாய, பொருளாதார உள்ளடக்கங்களை புறவயமுறையில் பகுத்தாய்வதற்குப் பதிலாக முதலாளித்துவத்தை மீண்டும் புனரமைத்தல் என்ற குற்றச் சாட்டை 'அர்த்தமற்ற கோட்பாடு'' என்று கூறிவிடுகின்றார்

ர். காட்டிக் கொடுக்கப்பட்ட புரட்சி என்னும் நூலில் டிராட்ஸ்கி குறிப்பிடுவதானது ''அரசு யந்திர அமைப்பிலிருந்து புரட்சிகரமான கட்சியினால் விலக்கப்படுவதைவிட குறைவான எண்ணிக்கையினரே முதலாளித்துவமீட்சியினால் விலக்கப்படுவர்'',


எந்த விதத்திலும் சோவியத் தொழிலாள வர்க்கத்தை கொர்பச்சேவ் ஆட்சிக்கு எதிராக புரட்சிகரமான இயக்கத்தில் திரட்டுவதற்கு எதிராக மண்டல் இருக்கின்றார். அனைத்துலக குழு கோர்பச்சேவை கண்டனம் செய்வதற்குக் கோபப்படுகின்றார். அதற்குப் பதிலாக குட்டிமுதலாளித்துவ போலித்துவ ஞானி போல் அவர் அழுத்தமாகக் கூறுவது, ''சோவியத் யூனியனில் நடைபெறும் எல்லாவற்றையும் 'வலதுசாரிதன்மை வாய்ந்தது' அல்லது எதிர்ப் புரட்சித்தன்மை வாய்ந்தது என்று வாதிடுவது பொருந்தாது. கொர்பச்சேவ் வலதுசாரியானால் பிரஸ்நோவ், ஸ்டாலின் இவர்கள் இடதுசாரிகளா கொர்பச்சேவ் செய்யக்கூடியது எல்லாம 'துரோகம்' ஆனால் ஸ்டாலின் பிரஸ்நோவ் அடக்குமுறையுடன் ஒப்பிடுகையில் மாஸ்கோ சதி வழக்கு குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றவாளி இல்லை என அறிவித்ததும் வேலை நிறுத்தங்களை அனுமதித்ததும் வலது சாரித்தன்மை வாய்ந்ததா? ஹிட்லர், ஸ்டாலின் ஒப்பந்தத்தையும் போலந்து, ஜெர்மனி தொழிலாளர் இயக்கத்திற்கு அதனால் ஏற்பட்ட விளைவுகளையும் அவர் கண்டனம் செய்தது குறித்து என்ன ஆட்சேபணம்? ஹங்கேரி, செக்கோஸ்லோவேகியாவில் ராணுவத்தலையீட்டைக் கண்டனம் செய்ததற்கு ஆட்சேபணம் உண்டா? ஆனால் அதற்கு மாறாக மொத்தமாக 'ஆமாம். ஆமாம்' என்று கூறுவதோ அல்லது 'ஆமாம் ஆனால் என்று கூறுவதோ ஒத்துக் கொள்ளக்கூடியது இல்லை. சோவியத், உலகத் தொழிலாள வர்க்கக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் இது ஒவ்வாது. வேலையின்மையை தோற்றுவித்து நிஜக்கூலி குறைவதை உண்டாக்கும் பொருளாதார நடவடிக்கைகளையோ அல்லது மத்திய அமெரிக்கா, தென் அமெரிக்கா புரட்சிகளைக் காட்டிக்கொடுக்கும் அழுகிப்போன சமரசங்களையோ நம்மால் அங்கீகரிக்க முடியாது. இந்த அத்தியாயத்தில் தான் உருவாக்கியிருப்பது [illegible] விஷயத்தை [illegible] பிரச்சனைக் குப் பிரசசினை [illegible] தீர்ப்புக் கூறுவது தான் சரியானது. கடந்த காலத்தில் இருந்தது போலவே அமைச்சின் இன்று இருப்பது போல சோவியத் யூனியனில் இன்று நடப்பது என்ன? உலகில் இன்று நடப்பது என்ன? என்பதில் அவர்கள் கூறுவது தவறு என நிரூபிக்கப்படும்' (பெரஸ்த்ரொய்காவிற்கு அப்பால். பக்கம் 134).

''சரித்திரம் அலாதியான சம்பவங்களாக மாற்றப்படுகின்றது. காலத்திற்கு ஏற்றவாறு தோற்றுவிக்கப்பட்ட ஒரு தொடரான முன்முயற்சி அற்ற பேச்சாக அரசியல் மாறுகிறது. இங்கே நாம் அதன் முழு அர்த்தத்தில் மார்க்சிசம் சிதறுண்டு போவதையும், அரசியல் அதன் சிறு சிறு அம்சங்களாக சிதறுண்டு போவதையும் காண்கிறோம். அனுபவவாதம், அதன் வளர்ப்புச் சகோதரனை தோற்றத்தை அப்படியே மனதில் பதித்துக்கொள்ளும் வாதம் (Impressionism) இவையே தலையிலிருந்து பாதம் வரை ஆதிக்கம் செலுத்துகின்றது. (மார்க்சிசத்தை காத்து' நியு பார்க் பிரசுரம், பக்கம் 114-115).

மண்டலின் நிலைகள் குட்டி முதலாளித்துவ இடைநிலை வாதிகளின் நிலைகளே, அவர்கள் நோக்கம் எல்லாம் ஸ்டாலினிச அதிகாரத்துவத்திற்கு எதிராகத் தொழிலாளி வர்க்கம புரட்சிகரப்போராட்டம் நடத்துவதிலிருந்து திசை திருப்புவதேயாகும். அனைத்துலகக் குழு பெரஸ்த்ரொய்காவை முதலாளித்துவ மீட்சி என்று வரையறுப்பதைக்கண்டனம் செய்வதில மண்டலுடன் பிரிட்டிஷ் தொழிலாளர் புரட்சிக கட்சியும் (WRP) சேர்ந்து கொண்டுள்ளது. இந்தக் கட்சி 1986ல நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவுடன பரிந்துசென்றதில் இருந்து முழுவதும் வளர்ச்சி அடைந்த பப்லோவாதமாக பரிணமித்துள்ளது.

WRPஇன் பத்திரிகையான வொர்க்கர்ஸ் பிரஸ்' மே 13, 1989 இதழில் சிரில் ஸ்மித் என்ற எழுத்தாளர் நான்காம் அகிலத்தின் அனைத்துலககுழு கொர்பச்சேவின் கிளாஸ்நாத், பெரஸ்த்ரொய்கா என்பது வேண்டுமென்றே உணர்வு பூர்வமாக முதலாளித்துவத்தைக் கொண்டு வருவதுதவிர வேறு 'அலல'. என்று பார்ப்பதை கண்டனம் செய்தார். மேலும் செப்டம்பர் 9ல் வெளியான 'வொர்க்கர்ஸ் பிரஸ்' கொர்பச்சேவ் முதலாளித்துவத்தை மீட்கவேண்டுமென்றமோகம் கொண்டுளளார் என்று அனைத்துலக குழு கூக்குரலிடுகின்றது என்று மறுபடியும் கண்டனம் செய்தது.

அனைத்துலக குழுவின் பெரஸ்த்ரொய்கா பற்றிய மதிப்பீட்டைக் கண்டனம் செய்யும் அதே சமயம் ஸ்மித்தும் WRPயும் கொர்பச்சேவின் பொருளாதாரத் திட்டத்தை பற்றிய ஸ்தூலமான ஆய்வை முன்வைக்கவில்லை. மண்டலைப் போலவே அவர்கள் கொர்பச்சேவ அவர் ஆலோசகர்கள் பெரஸ்த்ரொய்காவின் லட்சியங்கள பற்றி வெளியிட்ட மிகத்தெளிவான அறிக்கைகளை கவனிக்கக்கூட மறுக்கின்றனர். ஜூன் 1989 மக்கள் பிரதிநிதிகள் காங்கிரசின் ஆரம்பக்கூட்டத்தில் கொர்பச்சேவ் அறிவித்ததாவது, ''சீர்திருத்தம ஆழமாகும் பொழுது பொருளாதார உறவுகளின் ஒரு அமைப்பு உருவாக்கப்படும், இந்த அமைப்பு சட்டத்தின் ஆட்சியின அடிப்படையில் இருக்கும் அது [illegible] கட்டளைகள் [illegible] அடிப்படையில் இருக்காது சட்டத்தால் ஒழுங்குபடுத்தப்பட்ட உறவுகளின் அடிப்படையில் அமையும். பொருளாதாரத்திற்கு அரசு வழி காட்டுதலுக்கு



சோவியத் தொழிலாளர்கள்

..தனம் இதுவேயாகும், செப்..டம்பர் 1949ல் எழுதியகட்டுரை ..ன்றில் அவர் வாதிட்டதாவது ..முதலாளித்துவத்திலிருந்து ..சோசலிசத்திற்கு மாறும் சரித்.. ..காலகட்டத்தில் பல நூற்..றாண்டுகள் வரை ஒரு காலப் ..பிரிவு நீடிக்கலாம். [illegible] ..நமமுடைய ஆசானகள ..அறிவினால் எதிர்பார்த்த..தைவிட கடுமையான சிக்கலான புரட்சியின் வளர்ச்சியை ..நாம் எதிர்கொள்வோம். இந்தத் ..தொழிலாளர் அரசுகள் சாதா..ரணமானவை அல்ல. ஆனால் ..சீரழிந்தனவாகவே இருக்கும்' ..p சர்வதேசிய செய்தி ..க்கை 1949 (பக் 3)

இரண்டாவதாக டிராட்ஸ்..கிக்கு எதிராக பாப்லோவும். ..மண்டலும் வலியுறுத்திய ..து: ''ஸ்டாலினிச அதி..காரத்துவம் எதிர்பாராதவிதத்..தில் சோசலிசத்தை அடைவ..தற்குச் செயல்பட்டுக்கொண்..டிருக்கும் போக்கில் தன்னைத் ..தானே சீர்திருத்திக்கொள்ளும் தன்மை பெற்றது'' நான்காம் அகிலத்தின் ஸ்தாபித திட்டத்தில் கூறியுள்ளபடி இந்த அதிகாரத்துவ அரசுகளைத் தூக்கி எறிய ஒரு பலாத்காரமான பாட்டாளி வர்க்க அரசியல் புரட்சி அவசியம் என்பதை இவ்வாறாக ..பப்லோவாதம் மறுத்தது.

திட்ட அடிப்படைகளையும், கொள்கைகளையும பாதுகாப்பதற்காகவே இது ஸ்தாபிக்கப் பட்டது கடந்த 36 வருடங்களாக திரட்டப்பட்ட பிரமாண்டமான [illegible], அனைத்துலக குழு ஸ்தாபிக்கப் பட்டதன் உள்ளடக்கமும் பாப்லோயிசத்தின சந்தர்ப்ப வாதத்தை எதிர்தது அது நடத்திய போராட்டமும் சரியானது என்று நிரூபித்துள்ளது அதிகாரத்துவததை எதிர்த்து தொழிலாள வர்க்கம் நடத்திய இயக்கத்தின ஒவ்வொரு கட்டத்திலும் 1953ல் ஸ்டாலின மறைவிலிருந்து 1956 ஹங்கேரியப் புரட்சியிலிருந்து 1970,-1980-81ல் போலந்து தொழிலாளர்கள் எழுச்சிவரையில, இன்றைய கோர்பச்சேவ் ஆட்சியின நெருக்கடி வரையிலபாப்லோவாதிகள்செய்தது என்ன? ஸ்டாலினிஸ்டுகளின் கடைசிப்பாதுகாப்பு அரணாகச் செயல்பட்டு மக்களை அரசியல் புரட்சிப்பாதையிலிருந்துதிசை திருப்பவே முயன்றுள்ளனர்

மண்டல் அண்மையில் எழுதிய புத்தகம் 'பெரஸ்த்ரொய்காவிற்கு அப்பால்'' என்பதன் மூலமாக அவர் எதிர்புரட்சி ஸ்டாலினிசத்தின் பாதுகாவலன் என்பதைத் தன்னைத் தானே அம்பலப்படுத்திக் கொண்டுள்ளார் கொர்பச்

மண்டல் இந்த ''அர்த்தமற்ற கோட்பாட்டின்'' ஆசிரியர் டிராட்ஸ்கி, அவர் 1936ம் ஆண்டிலேயே ஒரு அரசியல் புரட்சியின் மூலம் சீரழிந்த தொழிலாளர் அரசு தூக்கி எறியப்படாவிட்டால் அங்கு முதலாளித்துவம் மீட்சி அடைவதிலேயே முடியும் என்று எச்சரித்தார். இதையும் தவிர சோவியத்யூனியன், சீனா (மிகத் தெளிவாக) போலந்து, ஹங்கேரி நாடுகளில நடக்கும் சம்பவங்கள் நிரூபிப்பது என்ன வென்றால். ஸ்டாலினிச ஆட்சி முறைகள் அரசுடமையாக்கப் பட்ட சொத்துரிமைகளை ஒழித்துக்கட்டும் தன்மை பெற்றவை என்பது தான்,

மண்டல் இந்நாடுகளில் முதலாளித்துவ மீட்சியின் சாத்தியத்தை தவிர்க்கின்றார்' அதற்கு அவர்கூறும் காரணம் அப்படிப்பட்ட முதலாளித்துவ மீட்சி ஏற்பட்டால் அதிகாரத்துவத்திற்கு லாபத்தை விட நஷ்டமே அதிகம் என்பதாகும ஸ்டாலினிசத் தலைவர்கள் புரிந்துகொள்வது என்னவென்றால் அதிகாரத்துவத்தின பொருளாதார சலுகைகளுக்கு ஆபத்தாக இருப்பது முதலாளித்துவ மீட்சி அல்ல தொழிலாள வர்க்கத்தின் அரசியல் புரட்சி. என்பதுதான். இந்த உண்மை மண்டல் புத்தகத்தின்

## அரசியல் திவால்

இது அரசியல் மற்றும் அறிவுக்கலையின் திவால் தன்மையே. கோர்பச்சேவ் கொள்கைகளை பிரச்சனைக்குப் பிரச்சனை முறையில அணுகுவது என்ற மண்டல் வாதம் இந்த ஆட்சி முறைமீது ஒரு மித்த ஐக்கியப்படுத்தப்பட்ட கருத்து அவரிடம் இல்லை என்பதையே அம்பலப்படுத்துகின்றது. சர்த்தரப்போக்குகளின அரசியல தட்டங்களை ஆய்வு செய்யும பொழுது இப்படிப் பட்ட முரண்பாடான தத்துவத்திற்கு டிராட்ஸ்கிசரியான வரையறுப்பு கொடுத்தார்.

★10ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com



# 1989 : அரசியல் புரட்சி

பொருளாதாரமேலாண்மைக்கும் இடையில் தெளிவான வேறுபாடு இருக்கும்.

''தொழில் நிறுவனங்கள், ஸ்தாபனங்கள் கூட்டு மூலதனசபைகள், கூட்டுறவுகள் ஆகியவை பொருளாதாரத்தின் பிரதான நடிகர்கள் ஆவார்கள். பொதுவான கடமைகளை ஆற்றுவதற்கும், முயற்சிகளை ஒன்றுபடுத்துவதற்கும் அவைகள்தானியங்கும் சங்கங்களையும் யூனியன்களையும் ஏற்படுத்துவார்கள். தற்சமயம்அமைச்சங்களினுல் நிறைவேற்றப்படும் மேலாண்மை பணிகளைஅந்தசங்கங்கள் மேற்கொள்ளும். நம்முடைய அனுபவத்தினுலும் பொருளாதார வளர்ச்சியின் உலகம் தழுவிய போக்குகளினுலும் இந்த அணுகுமுறை சரியானது என்று நாம் நம்புகின்றோம்''

மத்திய திட்டமிடலை ஒழித்துக்கட்டிவிட்டு தனி உடமை அடிப்படையில் தொழில்களை ஸ்தாபிப்பது என்பதற்கு அழைப்பு விடுவதைத் தவிர இது வேறு என்ன? (நிறுவனங்கள் ஸ்தாபனங்கள் கூட்டு மூலதன சபைகள், கூட்டுறவுகள் என்ற சொற்கள் தனியுடமைத் தொழில்கள் என்பதற்குப்பதிலாக நாசுக்காக உபயோகிக்கப்பட்டவையே) மேலும் சோவியத் பொருளாதாரத்தில் இவை பிரதான சக்தியாக இருக்கும்.

பெரும்பாலான உண்மைகளுக்கு விரோதமாகபப்லோவாதிகள் கீழ்கண்ட உண்மைகளுக்கு விரோதமாக மறுத்துப் பேசுகின்றனர். போலந்து நாட்டில் முன்னேறி வரும் மாற்றங்கள் கண்ணுக்கு புலனாகும் சாட்சியம்கூறுகின்றன அந்த உண்மை என்ன? ஸ்டாலினிச ''சீர்திருத்த'' வேலைத்திட்டத்தின் முதலாளித்துவ சார்பு குணம்விளக்கிக்காட்டுவதுஎன்னவென்றுல்சந்தர்ப்பவாதம் என்பது ஏகாதிபத்தியம், ஸ்டாலினிசம்இவற்றின் கூட்டாளியாக உள்ளது. கிழக்கு ஐரோப்பாவிலும், சோவியத் ரஷ்யாவிலும் மீண்டும் முதலாளித்துவத்தை ஸ்தாபிப்பதில் கூட்டாளியாக இருக்கின்றது.

அனைத்துலக குழு, பெரஸ்த்ரொய்காவின் எதிர்புரட்சி உள்ளடக்கங்களை அம்பலப்படுத்துவதில்உறுதியாகஇருப்பதால் WRP சந்தர்ப்பவாதிகள் இந்த அனைத்துலக குழு தொழிலாள வர்க்கத்தைப் புறக்கணிப்பதாகவும் சோவியத் ரஷ்யாவிலும் கிழக்கு ஐரோப்பாவிலும்முதலாளித்துவம் மீண்டும் ஏற்பட்டுவிடும் என்று நம்புவதாக குற்றம் சாட்டுகின்றனர். இவ்விதம் கூறுவது அனைத்துலக குழுவின் நிலைகளை வேண்டும் என்றேதிரித்துக்கூறுவதாகும். தொழிலாளர் கழகத்தைச் சேர்ந்த தோழர் டேவிட்நார்த் பெரஸ்த்ரொய்காவும், சோசலிசமும் என்ற தம்முடைய நூலில் அனைத்துலக குழுவின் நிலைப்பாடுகளை தெள்ளத் தெளிவாக விளக்கிக் கூறி உள்ளதாவது :

''ஆனால் அதிகாரத்துவத்தினரின் திட்டங்கள், தற்பெருமை இருப்பினும் அங்கே சோவியத் தொழிலாள வர்க்கமும் கூட உள்ளது, இந்தத் தொழிலாள வர்க்கம் கற்பனைக்கு எட்டாத புரட்சிகரசக்தியின் பிரதிநிதியாக விளங்குகின்றது, 1917ல் ரஷ்யத்தொழிலாள வர்க்கம் 3,000,000 பேர்களைத்தான் கொண்டிருந்தது இந்தத் தொழிலாள வர்க்கத்தால் உலக சரித்திரத்தில் மிகப்பெரிய சமுதாய மாற்றத்தைக் கொண்டு வர முடிந்தது, இன்று அந்தத் தொழிலாள வர்க்கம்150,000,000பேர்களை கொண்டது. உலகிலேயே மிகப்பெரிய தொழில் கூட்டமைப்புகளில் (Complexes) வேரூன்றி இருக்கின்றது, கோர்பச்சேவ் கொள்கைகளின் எதிர்ப்புரட்சி உள்ளடக்கங்கள் தெளிவாகத் தெரிகின்றது. ஆகவேஇந்தப் புரட்சியைப் பாதுகாக்க சோவியத் தொழிலாள வர்க்கம் கோடிக்கணக்கில் ஒன்றுதிரளுவார்கள் என்பதில் ஐயம் இல்லை, உலக முதலாளித்துவக் கட்டமைப்புக்குள் சோவியத்யூனியன் சமாதான முறையில் இணைக்கப்பட்டுவிடும் என்று கூறுவதை மனதிலும் கருத முடியாது''. பக்கம் 69).

இந்தப் பலம் ஒன்றுதிரட்டபடுவதற்கு முதலாவதாக சோவியத்யூனியன் கிழக்கு ஐரோப்பாவிலுள்ள தொழிலாள வர்க்கம் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தினரின் திட்டத்தின் உள்ளடக்கங்களைத் தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும், கோர்பச்சேவிஸ்டுகளின் நிலைப்பாடுகளையும் புரிந்துகொள்ள வேண்டும். இவற்றிற்கு எதிராக சமரசமற்ற விட்டுக் கொடுக்காத புரட்சிப் போராட்டத்தின் அவசியத்தையும் புரிந்து கொள்ள வேண்டும். இதைத்தான் சந்தர்ப்பவாதிகள் தடுக்க முயல்கின்றார்கள். இதற்காக அவர்கள் ஸ்டாலினிஸ்டுகள்முதலாளித்துவத்தை மீண்டுமஏற்படுத்த முயலவில்லை, அப்படி செய்யவும் முடியாது எனறு போலிவாதங்களை முன்வைக்கின்றனர்.

பாப்லோவாதமானது, ஸ்டாலினிசத்திற்கு சரணகதி அடைந்ததைஎதிர்த்துஅனைத்துலகக்குழு நீண்ட போராட்டம் நடத்தியுள்ளது. அதிகாரத்துவத்தினருக்கு எதிராக வளர்ந்து கொண்டு



ஜேம்ஸ் பி. கானன்

வரும். மக்கள் இயக்கம் அனைத்துலககுழுவின் போராட்டத்தை பெரிய அளவில் ஊர்ஜிதம் செய்துள்ளது.

அரசியல் புரட்சி, எரிமலைகக்குவதுபோல் தோன்றி இருப்பது உலக அளவில்வர்க்கப்போராட்டம் வளர்ச்சி அடைவதற்கு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகும்: அது ஒரு முழுமையான சரித்திர காலத்தை ஒரு முடிவுக்குக்கொண்டு வருகின்றது. ஸ்டாலினிச அதிகாரத்துவத்,தினுல் சர்வதேசிய வர்க்கப் போராட்டம் நசுக்கப்பட்டதும் விகாரப்படுத்தப்பட்டதும் ஆக்கிய காலமதான்இது உலக ஏகாதிபத்தியத்துடன் ''சமாதான சக வாழ்வு'' என்ற ஸ்டாலினிச திட்டம் அமல் நடத்தப்பட்ட காலம் தான் அது. மேற்கொண்டு ஸ்டாலினிச ஆட்சிகளுக்கு எதிராகத் தோன்றிய இந்தக் கிளர்ச்சி முதலாளித்துவ நிலையங்களில் உள்ள தொழிலாளர்கள் இயக்கத்திற்கு ஒரு தூண்டுகோலாகவும் உள்ளது, சோவியத், சீன, கிழக்கு ஐரோப்பியத்தொழிலாளர்கள் ஸ்டாலினிஸ்டுகளுக்கு எதிராக தொடுக்கும் ஒவ்வொரு அடியும் உலகம் பூராவிலும் உள்ள தொழிலாளர்களின் சோஷலிச புரட்சிகரப் போக்குகளுக்குவலுவூட்டுகின்றது. இவ்விதமாக ஸ்டாலினிசத்திற்கு எதிராக மட்டிலும் இந்த சாவுமணி அடிக்கவில்லை. சர்வதேச தொழிலாளர் இயக்கத்தின் மத்தியில் முதலாளித்துவ சுரண்டலுக்குஎதிராகதொழிலாளி வர்க்கம் நடத்தும் போராட்டத்தின் வளர்ச்சியைத் தடுக்க முயலும் அனைத்து சீரழிந்த அதிகாரத்துவத்தினருக்கு எதிராகவும் இந்த சாவுமணி அடிக்கின்றது.

இறுதியாக கூறுமிடத்து சர்வதேசியத் தொழிலாளர் இயக்கத்தின் மீது தற்காலிகமாக ஸ்டாலினிசம் ஆதிக்கம் செலுத்துவதற்கு அடிபணிந்து சரணகதி அடைந்ததையேபாப்லோவாதம்குறிக்கின்றது. 1951ல் பாப்லோ, மண்டல் இருவரும் விட்ட கேவலமான அறிக்கையில் இந்த சரணகதியின் மிகத் தெளிவான தத்துவார்த்த விளக்கம் காணப்படுகின்றது அந்த அறிக்கை கூறுவது : ''முதலாளித்துவ ஆட்சியும், ஸ்டாலினிச உலகமும் தான் புறவய (objective) சமுதாய உண்மையாக உள்ளது''. இவ்வாருக, பாப்லோவாத சந்தர்ப்பவாதிகள் ஸ்டாலினிசத்திற்கு ஒரு பிரமாண்டமான வரலாற்றுப்பணியை அளித்தனர், அதன் மூலம் தொழிலாள வர்க்கத்தின், அதன் உண்மையான மார்க்சிச முன்னணியான நான்காம் அகிலத்தின் சுதந்திரமான புரட்சிப்பங்கையும் நிராகரிக்கின்றனர்.

40 ஆண்டுகட்கு முன்னுல் நவமபர் 4. 1949ல் ரஷயப் புரட்சியின 32ம் ஆண்டு விழாவை கொண்டாடும் பொழுது ஐக்கிய அமெரிக்காவில் டிராட்ஸ்கிச இயக்கத்தின் ஸ்தாபகரும் நான்காம, அகிலத்திற்காகப் போராடிய வருமானஜேம்ஸ். பி கானன் பேசியபேச்சில்''பயமுடைந்த மேல்நாட்டுக்காரர்கள் தோல்வி மனப்பான்மையே தொழுவாகக் கொண்டவர்கள்' ஸ்டாலினிசத்திற்கு உலகைக் கைப்பற்றும்வரலாற்றுப் பணியை வழங்கியதற்கு எதிராக பயங்கர மறுப்புத்தாக்குதலை விடுத்தார் இரண்டாம் உலகப்போரைத் தொடர்ந்து ஸ்டாலினிச அதிகாரத்துவத்தினர் நிலையற்ற ''வெற்றிகளை'' கண்டபோதிலும் கானன் பின்வருமாறு அறிவித்தார்.

''மனித சமூகம் — சோசலிசம், சுதந்திரம் இதை நோக்கி அணிவகுத்துச் செல்கின்றது. காட்டுமிராண்டித்தனம், அடிமைத்தனம் இவற்றை நோக்கி பின்னுல் செல்லவில்லை. பாசிசத்திற்கோ அல்லது ஸ்டாலினிசத்திற்கோ இந்த முன்னேற்றப் பாதையின் குறுக்கே நிற்க உரிமை இல்லை. ஸ்டாலினிசம் என்பது தொழிலாளர் இயக்கத்தில் சீரழிந்த வளர்ச்சியைக் குறிக்கின்றது, தொழிலாளர் புரட்சிக்குத் தேவையான நிலைமைகள் எல்லாம் நன்ருகப் பழுத்து இருக்கும் பொழுது தேவை இல்லாமல் அப்புரட்சிதேக்கம் அடைந்து காலதாமதம ஆகியதில் ஏற்பட்ட அழுகிய நிலைமையே ஸ்டாலினிசம் என்பது. பாசிசமோ அல்லது ஸ்டாலினிசமோ 'வருங்கால அலையைக் குறிக்கவில்லை. அவை சரித்திரவளர்ச்சியின் முக்கிய போக்கையும் குறிக்கவில்லை, மாருக அவை முக்கியச் சரித்திரப்போக்கின் பிறழ்தல் ஆகும். காலனி எழுச்சி, தொழிலாளர் புரட்சி என்ற அடுத்த பெரிய எழுச்சி அலையில் அவை ஒழித்துக் கட்டப்பட்டு விடும் (சோசலிசத்திற்கான சொற்பொழிவுகள்' பாத் பைண்டர் வெளியீடு பக்கம் 365-66.)

இந்த தைரியமான முன்னறிவுப்பேச்சு இப்பொழுது உண்மையாகிக் கொண்டு வருகின்றது. ஸ்டாலினிசத்தின் மரண வலிப்பு உண்மையான மார்க்சிசம் புத்துயிர் பெற்று எழுவதைக் குறிக்கிறது. இந்த உண்மையான மார்க்சிசத்தின் ஜீவன் உள்ள அரசியல் தோற்றம் தான் நான்காம அகிலம.

# ஜெரி ஹீலி மரணம்

பிரிட்டன் தொழிலாளர் இயக்கத்தில் 50 வருடங்களுக்கு மேலாக ஒரு முக்கிய பங்கு வகித்த ஜெரிஹீலி, 76 வயதில் லண்டனில் டிசம்பர் 14ல் மரணமடைந்தார். ஹீலி முதலில் 1928ல் கம்யூனிச இயக்கத்தில் சேர்ந்தார், அவர் பின்னர் ஸ்டாலினிச அகிலத்தில் இருந்து 1937ல் முறித்துக்கொண்டு டிராட்ஸ்கிய எதிர்ப்பு இயக்கத்தின் பிரிட்டன் பகுதியில் சேர்ந்தார்.

அவர் 1953ல் உருவாக்கப்பட்ட நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் ஸ்தாபன உறுப்பினர்களில் ஒருவராவார். பப்லோவாத கலைப்புவாத தாக்குதலுக்கு எதிராக டிராட்ஸ்கிச இயக்கத்தை காத்து ஜேம்ஸ். பி. கானன் வெளியிட்ட பகிரங்க கடிதத்திற்கு ஆதரவாக அனைத்துலக குழு உருவாக்கப்பட்டது, 1959ல் சோசலிசத் தொழிலாளர் கழகம் அமைக்கப்பட்டு அது 1973ல் தொழிலாளர்புரட்சிக் கட்சியாக புரட்சிக்கட்சியாக பெயர் மாற்றம் செய்யப்படும் வரையில் அதன் பொதுச் செயலாளராகவும் 1985 வரை மத்தியகுழுஉறுப்பினராகவும் இருந்தார்.



1970களிலும்,1980களிலும் ஹீலியின் தீவிரமான வலது சாரிப்போக்கு நான்காம் அகிலத்தின் அனைத்துலககுழுவின் வேலைத்திட்டத்தையும், கட்சியின் அடிப்படை அமைப்பு விதிகளையும் மீறுவதற்கு இட்டுச் சென்றது. அக்காரணங்களினுல் அவர் கட்சியிலிருந்து அக்டோபர் 25, 1985ல் வெளியேற்றப்பட்டார். அவர் தனது வலது சாரி அரசியல் சீரழிவை தொடர்ந்தார், கோர்பச்சேவின், ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் முதலாளித்துவ மீட்சியின் வெளிப்படையான ஆதரவாளராக மாறினுர்.

ஹீலியின்வாழ்க்கைபற்றிய விபரமான மதிப்பீடு தொழிலாளர் பாதையின் எதிர்கால இதழ்களில் வெளியிடப்படும்.



This pamphlet can be ordered from

Neue Arbeiterpresse
Alfredstr. 71
D – 4300 Essen 1
West Germany

Pour commander, écrire à
Marxisme Révolutionnaire
B.P. 388
75626 Paris Cedex 13

Please pay DM 1,- plus DM 0,50 postage to account no. 2 11 85 – 431, Postgiroamt Essen

Subscribe to:

The Tamil language paper of the Revolutionary Communist League, Srilankan section of the International Committee of the Fourth International, and excerpts from the paper of the Socialist Labour League (India), which is in sympathy with the ICFI, are regularly reprinted for distribution in Europe.

தொழிலாளர் பாதை

Have it posted — 20 issues: DM 26,-

Write to Neue Arbeiterpresse, Postfach 100 105, D - 4300 Essen 1, West Germany

Subscription payable to account Neue Arbeiterpresse (Bettina Rippert), No. 211 85 - 431, Postgiroamt Essen (effected at any post office)

Fourth International

Now available: Volume 15, Nos. 3-4 (July-December 1988)

Contains:

- The World Capitalist Crisis and the Tasks of the Fourth International. Perspectives Resolution of the International Committee of the Fourth International
- Gorbachev and the Soviet Union
- The 1992 European Internal Market
- Sri Lanka and the Assassination of Comrade R.A. Pitawala
- The Cases of Patrick Slaughter and Mark Curtis




Also available in German (DM 10,- per issue)

Subscription rates:

| | | |
|---|---|---|
| US | 1 issue | $ 8.00 |
| | 1 year (4 issues) | $ 30.00 |
| Europe, Latin America | 1 issue | $ 10.00 |
| | 1 year (4 issues) | $ 40.00 |
| India, Asia, Africa, Australia | 1 issues | $ 12.00 |
| | 1 year (4 issues) | $ 45.00 |

Labor Publications, Inc., P.O.Box 33023, Detroit, MI 48216

Printed in Germany
Neue Arbeiterpresse, Alfredstr. 71, D – 4300 Essen 1, West-Germany

படிப்பகம்